207
207
4.52
44231

# நமது தலைநகரம்

Pagination incorrect P.6

சே... டியார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 OCT 1952
MADRAS

...பூர் :: சென்னை-4.

V251
N52
108121

# நமது தலைநகரம்

▲

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

▼

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: 22, ஆகஸ்ட் 1952

உரிமை ஆசிரியர்க்கே

**விலை ரூ. 1-8-0**

ஆசிரியரின்
மற்ற நூல்கள்:

அமெரிக்காவைப் பார்!

நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்

என் பிரயாண நினைவுகள்

ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்

வளரும் தமிழ் (அச்சில்)

கோல்டன் பிரஸ், 2/50, டாணா தெரு, சென்னை-7.

# 1. நமது தலைநகரம்

யான் கல்லூரியிற் படித்தபோதே டில்லிக்குப் போக வேண்டுமென்று எண்ணினேன். அந்த எண்ணம் 1950 ஜுலையில்தான் நிறைவேறியது. மற்ற நாடு களின் தலைநகரங்களைப் பார்த்த பிறகு தம் நாட்டின் தலைநகரைப் பார்ப்பது தவருன முறை என்று பலர் கருதுகின்றனர். வெளிநாடுகளுக்குச் செல்லுமுன் தம் நாட்டைச் செவ்வையாகப் பார்க்கவேண்டும் என்னும் கொள்கையோடு அமெரிக்காவில் அண்மையில் ஓர் இயக்கம் தோன்றி யிருப்பதும் ஈண்டு நினைவில் வருகிறது.

## பழமையும் புதுமையும்

டில்லி பழமையும் புதுமையும் நிறைந்தது; பல நூற்ருண்டுகள் இலங்கையின் தலைநகராக அநுராத புரம் இருந்து வந்தது போலவே, பாண்டவர் காலமுதல் இந்தியாவின் பெரும் பகுதிக்கு டில்லி தலைநகராக இருந்து வந்திருக்கிறது. என்வே, இங்கரின் வரலாறும் இந்திய நாட்டின் வரலாறும் நெருங்கிய தொடர் புடையனவேயாம். கிரீசுக்கு ஏதன்சு நகரும், இத்தா லிக்கு ரோமாபுரியும் போல இந்தியாவுக்கு டில்லி சிறப் பானது. இதனுலேயே "டில்லிக்கு ராஜாவானுலும்

தல்லிக்கு (தாய்க்கு) பெட்டா (மகன்) தானே?" என்ற பழமொழி ஏற்பட்டது. யமுனை யாற்றங் கரையில் விரிவான வெளி நிலங்கள் 45 மைல் பரப்பு வரை யிருப்பதால், இப் பகுதி கண்டவர் மனத்தைக் கொள்ளை கொள்வதாக இருக்கிறது. 'தில்லி' என்ற சொல்லுக்கே இந்தி மொழியில் "மனத்திற்கு இன்பம் தருவது" என்று பொருளாகும். இவ்விடமே புது நகரங்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் என்று மன்னர்கள் எண்ணியதில் வியப்பில்லை. இது வரை எட்டு நகரங்கள் 1*டில்லியில் தோன்றியுள்ளன. முதல் ஆறு நகரங்கள் அழிந்து விட்டன. ஏழாவது டில்லி ஷாஜஹானால் கட்டப்பட்டது. இதற்கு 'ஷாஜஹானாபாத்' என்று பெயர். இன்றைய பழைய டில்லியும் இதுவே. அடைமொழி இன்றி டில்லி என்று மட்டுங் கூறினால், அப் பெயரும் பழைய டில்லியைத் தான் குறிக்கும். டில்லியின் எல்லையிலிருந்து இரண்டு மைல் தெற்கே ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஆணைப்படி, பிரிட்டிஷார் 1911-இல் புதிய நகர் ஒன்றைக் கட்டத்

(1)* எட்டு டில்லிகள்

| எண் | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | இந்த்ரப்ரஸ்தா | 10-ஆம் நூற்றாண்டு |
| 2. | சிறி | 1303 |
| 3. | துக்லகாபாத் | 1321 |
| 4. | ஜஹான்பன்னா | 1327 |
| 5. | பிரோஜாபாத் | 1354 |
| 6. | புராணகிலா | 1540 |
| 7. | ஷாஜகானாபாத் (பழைய டில்லி) | 1638 |
| 8. | புது டில்லி | 1911 |

தொடங்கினர். 1931 முதல் அது இந்தியாவின் தலைநகராக இருந்து வருகிறது. பாகிஸ்தான், பர்மா, ஏடன், ஆகிய நாடுகளிலுள்ள பகுதிகட்கும் புது டில்லி சில ஆண்டுகளுக்குத் தலைநகராக இருந்தது. இந் நகரில், நமது குடியரசுத் தலைவரின் மாளிகையும், சுதந்திர இந்திய அரசியலாரின் அலுவலகங்களும், இறுதி நீதி மன்றமும் (Supreme Court) பாராளு மன்றமும் இருக்கின்றன. முதலில், டில்லியைப் பார்வையிடுவோம்.

### சாந்தினி சவுக்

டில்லியின் முதன்மையான சாலை 'சாந்தினி சவுக்' என்பது. செங்கோட்டையின் வாயிலான லாகூர்க் கேட்டிலிருந்து 'கண்டா மண்டப்' (மணிக்கூண்டு)† வழியாக இச் சாலை முக்கால் மைல் தொலைவுக்குச் செல்லுகிறது. சாந்தினி சவுக் என்றால் வெள்ளி மார்க்கட் என்று ஹிந்தியில் பொருள்படும். தங்கம், வயிரம், விலையுயர்ந்த மாணிக்கங்கள், வேறு பல இரத்தினங்கள் முதலியன இங்கே விற்கப்படுகின்றன. ஷாஜஹான் காலத்தில், இது ஆசியாவிலேயே செல்வச் செழிப்புள்ள சாலையாக விளங்கிற்றாம்.

அரசு மாறிய போதெல்லாம் தீயும் பகையும் சூழ்ந்தது இங்கேதான்; நாயும் கழுகும் இரை தேடியதும் இங்கேதான். இப்போது, ஒட்டைக்கார்கள், கைவண்டிகள், கூடை தூக்குவோர், பழைய இரும்பு விற்பவர்கள், மாடுகள் இவற்றை ஒருங்கே நடுத் தெருவில் டில்லியில் பார்க்குமிடம், சாந்தினி சவுக்காகத்தான் இருக்கும். அங்குள்ள மக்கள் தமிழ் மொழி

† இந்த மணிக்கூண்டு 1951-இல் இடிந்து விழுந்து விட்டது

பேசுபவராகவும் தூய்மையுடையவராகவும் இருந்தால், சாந்தினி சவுக்குக்கும் சென்னை நகரிலுள்ள கொத்தவால் சாவடிக்கும் வேறுபாடு தெரியாது. மவுண்டு ரோடிலும் சைனு பஜாரிலும் கிடைக்கும் பொருள்களையும் சாந்தினி சவுக்கில் வாங்கலாம். ரிசர்வ், இம்பீரியல், சார்ட்டர்டு, லாயிட்ஸ் பேங்குகளும் பல இன்சூரன்ஸ் கம்பெனிகளும் அங்கே உள்ளன.

சாந்தினி சவுக்கு வட இந்தியாவுக்குப் பெரிய வாணிக நகரமாக விளங்குகிறது. தமிழ்நாட்டுக்கு விருதுநகர் போல, பஞ்சாப், பாட்டியாலா, உத்திரப் பிரதேசம், மத்திய பாரத் ஆகிய இராச்சியங்களுக்கு சாந்தினி சவுக்கு பலசரக்கு விலைகளை முடிவு செய்கிறது. சவ்வரிசி, உளுந்து, பருப்பு, எண்ணெய், பிண்ணுக்கு, சீரகம், மிளகு, இஞ்சி, மிளகாய், ஏலம், கிராம்பு, பாக்கு, ஈரோட்டு மஞ்சள் ஆகிய பொருள்களை நூறுயிரம் ரூபாய்க்கு வேண்டுமானுலும் இங்கே வாங்கலாம்.

செங்கோட்டை

சாந்தினி சவுக்கின் கிழக்குக் கோடியில் செங்கோட்டையின் வாயிலான லாகூர்க் கேட்டு இருக்கிறது. லாகூரிலிருந்து டில்லிக்கு சாந்தினி சவுக்கின் வழியே வரவேண்டிய காரணத்தால், இப் பெயர் ஏற்பட்டது. செங்கோட்டையை டில்லி வாசிகள் 'லால்கீலா' என்று குறிப்பிடுகிருர்கள். லால் என்ருல் சிவப்பு என்றும் கீலா என்ருல் கோட்டை என்றும் ஹிந்தியில் பொருள் படும். சிவப்பு நிறமான கற்களாற் கோட்டை கட்டப்பட்டிருப்பதால், இப் பெயர் வழங்கி வருகிறது. செங்கோட்டையின் பின்புறம் யமுனையாற்றங் கரையில்

இருக்கிறது. தாஜ்மஹாலைக் கட்டிய மொகலாயப் பேரரசரான ஷாஜஹான் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் 1639-இல் இதைக் கட்டினார். இதைக் கட்டி முடிக்க ஒன்பது ஆண்டுகள் ஆயினவாம். அக்காலத்தில் வெளி நாடுகளிலிருந்து வந்த அரசியல் தலைவர், அமைச்சர் முதலானோர் செங்கோட்டையிலுள்ள ஓவிய, சிற்ப வேலைத் திறனையும், பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட 'ரங் மஹால்' என்னும் மண்டபத்தையும், அங்கிருந்த பொருள்களையும், சிம்மாசனத்தையும் கண்டு வியந்தனராம். செங்கோட்டை எட்டுக் கோண வடிவிலுள்ளது. அதன் சுற்றளவு ஒன்றரை மைல்; மதில் மிக உயரமானது. பகைவரின் படையெடுப்பைத் தடுப்பதற்காக அக் கோட்டையைச் சுற்றி 75 அடி அகலமும் 30 அடி ஆழமும் உள்ள அகழி வெட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய கவினுறு கட்டிடங்கள் மொகலாயரின் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் உளப்பாங்கைக் காட்டுகின்றன. ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் இவ்வழகிய கட்டிடத்தைக் காணப் பற்பல நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானவர் வந்த வண்ணமாக இருக்கின்றனர்.

செங்கோட்டை இந்திய வரலாற்றில் சிறந்ததோர் இடம் பெற்றுவிட்டது. பெர்சியாவிலிருந்து படையெடுத்த நாதிர்ஷா இங்கேதான் தங்கியிருந்தார். சிப்பாய்க் கலகத்தின் விளைவாக நீதி மன்றங்கள் தீக்கிரையானதும் செங்கோட்டையிலேதான். நேத்தாஜியின் சுதந்திர இந்தியப் படை வீரர்களின் வழக்கு விசாரிக்கப்பட்டதும் செங்கோட்டையில்தான். 15-8-1947-இல் நாம் பிரிட்டிஷாரிடமிருந்து அரசியல் விடுதலை அடைந்த

தற்கு அறிகுறியாக, அன்று இந்திய நாட்டின் கொடியை முதல் அமைச்சர் ஜவஹர்லால் நேரு உயர்த்தியதும் செங்கோட்டையில்தான்.

பல அரண்மனைகளும், மொகலாய மன்னர்கள் கட்டிய சிறந்த மசூதியும் உள்ள செங்கோட்டையின் பெரும் பகுதி இந்தியப் படைவீரர்களால் பயன்படுத்தப் பட்டு வருகிறது. புதை பொருள் ஆராய்ச்சிப் பகுதி யினரின் மேற்பார்வையிலுள்ள மண்டபத்திற்கும், போர்க் கருவிகள் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் அறைக்கும், பூங்காக்களுக்குமே பொது மக்கள் செல்லலாம்.

**ஜாமா மஸ்ஜித்**

இது உலகிலுள்ள பெரிய மசூதிகளுள் ஒன்று. ஜாமா மஸ்ஜித் என்பதற்குப் பெரிய மசூதி என்பதே பொருள். இதுவும் ஷாஜஹானுல் கட்டப் பெற்றதே. இது செங்கோட்டையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. இதைச் சுற்றிச் சில லட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த மசூதி உயர்ந்த தளத்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ நூறு படிகளின் மீதேறி இந்த மசூதிக்குச் செல்ல வேண்டும். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஓரே நேரத்தில் ஒருங்கிருந்து தொழுகை நடத்துவதற்கு ஏற்றபடி இதன் முற்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மசூதியின் 200 அடி உயரமுள்ள கோபுரமும் மற்றைய வேலைப் பாடுகளும் ஒரு காலத்தில் டில்லியில் ஓங்கியிருந்த மொகலாய நாகரிகத்தின் சின்னங்களாக விளங்கு கின்றன.

டில்லி கேட்

இப் பெரிய மசூதியின் அருகே டில்லி கேட் இருக்கிறது. இந்த இடத்தோடு டில்லி முடிந்து விடுகிறது. டில்லிக்குக் காப்பாக மிகப் பெரிய கற்கோட்டையை நகரைச் சுற்றிலும் மொகலாய மன்னர்கள் அமைத்திருந்தனர். இச் சுவரின் ஒரு பகுதி—புது டில்லிக்குச் செல்லும் பகுதி—மட்டும் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியாரால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பகுதிகள் அழிந்து விட்டன. கோட்டைச் சுவரில் பல இடங்களில் வாயில்கள் இருந்தன. பத்து வாயில்கள் மட்டுமே இப்போது உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை ரத்த வாயில், காஷ்மீர் வாயில், டில்லி வாயில் ஆகிய மூன்றும் ஆகும். டில்லி கேட் மூன்று மாடிகளுடன் கூடியது ; உயரமான வளைவையும் (Arch) உடையது. இரு புறங்களிலும், கருங்கல்லிற் செதுக்கப்பட்ட பெரிய யானைகள் தோற்றம் அளிக்கின்றன.

டில்லியை நினைக்கும்போது மிகப் பல வாயில்களும், தூய்மையற்ற டிராம்களும், சுகாதாரம் என்றால் என்ன என்று அறியாத மக்களும்,மிகுதியான மக்கட் கூட்டமும், நாகரிகமில்லாத இந்தியச் சிற்றுண்டிச் சாலைகளும், மிகத் தூய்மையான—செசில், மெய்டன், கிராண்டு, சுவிஸ் போன்ற—(ஐரோப்பிய முறையில் நடைபெறும்) உணவு விடுதிகளுந்தாம் நினைவுக்கு வருகின்றன.

“டில்லி கேட்”டுக்கு அப்பாலுள்ளவை அனைத்தும் புது டில்லியைச் சேர்ந்தவை. டில்லி கேட்டிலிருந்து அரை மைல் தொலைவில் அசோக ஸ்தூபியும் அங்கிருந்து

ஒரு பர்லாங்குத் தொலைவில் இராஜ கட்டமும் இருக்கின்றன.

### இராஜ கட்டம்

நம் இந்திய நாட்டின் தந்தையான மகாத்மா காந்தியடிகளின் சமாதி இங்கே கட்டப்பெற்றிருக்கிறது. சமாதியின் சுற்றுப் புறமெல்லாம் விரிந்து பரந்த பூங்காக்களும் மின்சார விளக்குகளும் நீர் ஊற்றுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. யமுனையாற்றில் வெள்ளம் வந்தால், சமாதிக்குச் சேதம் உண்டாகாதபடி தடுக்கப் பெரிய மதில் எழுப்பப்பட்டு வருகிறது. நாள்தோறும் திரளான மக்கள் இராஜ கட்டத்துக்கு வந்து போகின்றனர். ஓய்வுக்கும் அமைதிக்கும் இது உற்ற இடம். இங்கே வருவோர் பலர் சமாதியின் மீது மலர்மாரி பொழிகின்றனர். பூக்கள் விற்று வயிறு வளர்க்கும் அகதிகளை இராஜ கட்டத்தின் வாயிலிற் காணலாம். இராஜ கட்டத்துக்குள் செருப்பு அணிந்து கொண்டு செல்லக் கூடாது. வெள்ளிக்கிழமைதோறும் இங்கே வழிபாட்டுக் கூட்டங்கள் நிகழ்கின்றன. அடிகள் வெள்ளிக்கிழமையன்று உயிர் நீத்ததே இதற்குக் காரணம்.

### பிர்லா மாளிகை

இராஜ கட்டத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் ஆல்புகர்க் சாலையில் ஐந்தாவது கட்டிடம் இந்தியாவின் பெரிய செல்வரான திரு. G. D. பிர்லாவின் புது டில்லி மாளிகை. இங்குள்ள தோட்டத்திலேயே காந்தியடிகள் கொலை செய்யப்பட்டதை யாவரும் அறிவர். கொலை நடந்த இடம் மிகக் குறுகியது.

சென்னையில் அடையாற்றைப்போல, புது டில்லியில் இந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவு. அடிகள் சுடப்பட்ட இடத்தில் ஒரு கல் பதிக்கப்பெற்றிருக்கிறது. ஹரிராம் **30-1-1948** என்று அதில் எழுதப்பட்டுள்ளது. இப் பகுதிக்கு மட்டும் செல்லுவதற்கென்று ஒரு பாதை அத் தோட்டத்தின் பின் பகுதியில் திறந்துவிடப்பட்டிருக்கிறது.

**புராணகீலா**

இந்தியா கேட்டுக்கு அருகே 'இர்வின் ஸ்டேடியம்' இருக்கிறது. இங்கே நம் நாட்டின் பெருமைக்கேற்ப ஓர் அரிய ஸ்டேடியத்தைச் சுதந்திர இந்திய அரசியலார் அமைத்துள்ளனர். இங்கேதான் ஆசிய விளையாட்டு விழா 1951-இல் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. இங்கேயுள்ள நீந்துகுளம் மிகப் பெரியது. இதற்கு அண்மையில் புராணகீலா இருக்கிறது. 3000 ஆண்டுகளுக்கு முன் இது பஞ்ச பாண்டவரின் தலைநகராக இருந்ததாம். அவர்கள் கட்டிய கோட்டையும் அரண்மனையும் ஹுமாயூன் காலத்தில் புதுப்பிக்கப்பெற்றனவாம். இப்போது இங்கே ஒரு சுவர் மட்டுந்தான் இருக்கிறது.

**இந்தியா கேட்**

பிர்லா மாளிகைக்கு அருகிலேயே 'ரெய்சினியா' தொடங்கி விடுகிறது. இந்திய அரசியலாரின் செக்ரடேரியட்டும் அதைச் சேர்ந்த அலுவலகங்களும் உள்ள பகுதியே ரெய்சினியா எனப்படும். குடியரசுத் தலைவரின் மாளிகைக்கு எதிரில், நெடுந் தொலைவில் ஒரு வாயில் இருக்கிறது. முதலாவது உலகப் போரில் உயிர்

நீத்த இந்திய வீரரின் நினைவாக இது நிறுவப்பட்டிருக்கிறது. இதன் பெயர் போர்ச் சின்னம். ஆனால் மக்கள் இதை 'இந்தியா கேட்' என்றுதான் குறிப்பிடுகிறார்கள். அரசியலார் ஒரு பெயரால் அழைத்தால் மக்கள் இன்னொரு பெயரால் அழைப்பது இந்தியாவில் வழக்கமாகிவிட்டது. பெங்களூரிலுள்ள 'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயன்சை' மக்கள் டாட்டா இன்ஸ்டிடியூட் என்று தானே அழைக்கிறார்கள்?

இந்தியா கேட்டைக் "கேட்வே ஆப் இந்தியா" வோடு சம்பந்தப் படுத்திவிடக் கூடாது. முன்னது டில்லியிலிருப்பது; பின்னது பம்பாயிலிருப்பது. முன்னது இந்திய அரசியலாரின் தலைவாயில்; பின்னது இந்தியாவின் தலைவாயில். முன்னது போர்வீரரின் நினைவு; பின்னது வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்ததன் அடையாளம். முன்னது சாலைகளின் சந்திப்பில் உள்ளது; பின்னது கடற்கரையில் உள்ளது. பின்னதைக் காட்டிலும் முன்னது, உயரமானது: அகலமானது: தூய்மையானது; உறங்குவதற்கேற்ற பெரிய திண்ணைகளுடன் கூடியது.

"ராஷ்டிரபதி பவன்"

இந்தியா கேட்டிலிருந்து 'ராஷ்டிரபதி பவ'னுக்குச் செல்லும் நேர் சாலைக்கு, 'கிங்ஸ்வே' என்று பெயர். இந்தியாவிலேயே சிறந்த சாலை என்று இதைக் கூறலாம். இந்தியா குடியரசானபின், "வைஸ்ரீகல் லாட்ஜ்" என்ற பெயரை மாற்றி 'ராஷ்டிரபதி பவன்' என்ற பெயர் கொடுக்கப்பெற்றிருக்கிறது. புது டில்லியில் சிறந்த கட்டிடம் இதுவே. இந்த மாளிகை அமைந்திருக்கும் இடம் மிகக் கம்பீரமானது; ஒப்பு உயர்

வற்றது. கட்டிடத்தின் அமைப்பும், உயர்ந்த தூண்களும், எழில்மிக்க தோட்டங்களும் கண்ணுக்கினிய காட்சியைத் தருகின்றன. விதவிதமான சலவைக் கற்கள் இம் மாளிகையிற் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாளிகையின் பரப்பு 330 ஏக்கர்; வெளிச்சுற்று ஒன்றரை மைல்; அங்குள்ள அறைகள் 340. இதைக் கட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் ஆயிற்றும். மாளிகைக்கு மின்சார வசதியும், தண்ணீர்க் குழாய்களும் தனி இயந்திரங்களின் வாயிலாக அமைக்கப்பட்டிருப்பதால், டில்லி மக்கள் விளக்கு இன்றியோ தண்ணீர் இன்றியோ துன்பப்பட நேர்ந்தால், அது குடியரசுத் தலைவரை அணுகாது.

**செக்ரடேரியட்**

இங்கே இந்திய அரசியலாரின் அமைச்சர்களுடைய அலுவலகங்களும் மற்றும் பல பெரிய அலுவலகங்களும் உள்ளன. இப்போது அரசியலாரின் வேலைகள் மிகுதியாகி விட்டதால், புதிய அலுவலகங்கள் புது டில்லி முழுவதும் உள்ளன. செக்ரடேரியட், இந்தியா கேட்டுக்கும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கும் இடையே உள்ள சாலையின் இருபுறத்திலும் உள்ளது. சாலைக்கு வடக்கே உள்ள பகுதிக்கு வடபிளாக் என்றும் தெற்கே உள்ள பகுதிக்குத் தென் பிளாக் என்றும் பெயர். இரு பிளாக்குகளுக்கும் இடையே, கனடா, தென்னுப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து ஆகிய குடியேற்றநாடு (டோமினியன்)களின் பெயர்கள் பொறிக்கப்பெற்ற தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

உலகெங்குமுள்ள அரசியலாரின் கட்டிடங்களில் இந்தியச் செக்ரடேரியட்டுக் கட்டிடமே மிகப் பெரியது

என்று வேற்று நாட்டினரும ஒப்புக்கொள்ளுகின்றனர். இதன் உயரம் 217 அடி. உச்சியிலுள்ள வட்ட வடிவமான கூண்டு நல்ல தோற்றத்தைத் தருகிறது. ஆயிரம் அறைகளுக்குமேல் இங்கே உள்ளன. கலை, போர், அமைதி, இசை பற்றிய நல்ல ஓவியங்களும் இங்கே எழுதப்பெற்றுள்ளன. பல அறிவுரைகளும் வாயில்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. வட பிளாக் வாயிலில் கீழ்க்காணும் அறிவுரையைக் கண்டேன். இது நாம் ஊன்றிக் கவனிக்கத் தக்கது.

"சுதந்திரம் என்பது ஒரு நாட்டு மக்களுக்குத் தானே வானத்திலிருந்து விழுந்து விடாது. மக்கள் தங்களைச் சுதந்திரத்திற்கு ஏற்றவர்களாக்கிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் ஒரு பேரின்பம். பாடுபட்டு அதைப் பெற்றால் தான், இன்பத்தை நுகரலாம்."*

செக்ரடேரியட்டுக்குள் செல்லுவதற்கு அனுமதிச் சீட்டு வேண்டும். தக்க காரணம் கூறினால், உரிய அலுவலர்கள் இசைவு தருவார்கள்.

புது டில்லி, திட்டமிட்டுக் கட்டப்பட்ட பூம் பட்டினம். நேரிற்பார்க்கும்போது எந்த இடமும் அருகில் இருப்பது போலவே நம் கண்களுக்குத் தெரியும். ஆனால், குறுக்கு வழிகளிற் போக இயலாது; சுற்றிச் சுற்றி வரவேண்டும். ஓர் இடத்தைப் போலப் பல இடங்கள் இருப்பதால், நாம் ஏமாற்றம் அடைய

*"Liberty will not descend to a people; a people must raise themselves to Liberty; it is a blessing that must be earned before it can be enjoyed."

நேரிடுகிறது. புது டில்லியின் சாலைகளில் சிறிது தொலைவுதான் நேரே முன்னேறலாம். அதற்குள் ஒரு வட்டம் எதிர்ப்படுவதால் அதைச் சுற்றி வந்து மறுபடி நேரே முன்னேற வேண்டும். மீண்டும் மற்றொரு வட்டம்......இந்திய வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுள்ள பிருதிவிராஜ், ஷாஜஹான். அக்பர், அவுரங்கசீப், அசோகர் ஆகியோரின் பெயர்கள் இந் நகரச் சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்தாலியில் எல்லாச் சாலைகளும் ரோமாபுரிக்குச் செல்லுகின்றன. புது டில்லியில் எல்லாச் சாலைகளும் செக்ரடேரியட்டுக்குச் செல்லுகின்றன. ராஷ்டிரபதி பவனையும் செக்ரடேரியட்டையும் கோயில்களாக மதித்து மக்கள் நாள்தோறும் அவற்றைச் சுற்றி வரும்படி புது டில்லி நகரம் அமைக்கப்பெற்றிருக்கிறது. காலை 9 மணி ஆகிவிட்டால், எல்லோரும் செக்ர டேரியட்டுக்குத்தான் செல்லுகிறார்கள். மாலையில், செக்ரடேரியட்டிலிருந்து புறப்பட்டு அரசியலாரின் ஊழியர், எதிர் வரிசையில் நெடுந் தொலைவுகளிலுள்ள தம் வீடுகளுக்குச் சென்று புறாக்கள் போல இரவு முழுதும் அடைந்து கிடக்கின்றனர். மறுநாட் காலையில், மீண்டும் பழைய பல்லவிதான்.

**கவுன்சில் ஹவுஸ்**

செக்ரடேரியட்டின் வடபிளாக்குக்கு அருகில் கவுன்சில் ஹவுஸ் இருக்கிறது. இக் கட்டிடம் வட்ட வடிவமானது. ரோமாபுரியிலுள்ள கொலீசியத்தைப் பின்பற்றி இது அமைக்கப்பெற்றிருக்கிறது. இதன் சுற்றளவு அரைமைல்; தூண்களின் உயரம் சேய்மையி

லிருந்து பார்க்கும்போதே கட்டிடத்தின் சிறப்பைப் புலப்படுத்தும். 27 அடி உயரமான 144 தூண்கள் இங்கே உள்ளன. கட்டிடத்தின் உச்சியிலுள்ள கூண்டு லண்டன் சென்ட் பாலஸ் கதீட்ரல் கூண்டின் அமைப்பைப் போன்றது. பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒரே நேரத்தில் கூடுவதற்கு வசதியாக இங்கே தனித்தனி மண்டபங்கள் உள்ளன. அவற்றிற்கு இடையே தோட்டமும் நீர் ஊற்றுக்களும் இருக்கின்றன. இறுதி நீதி மன்றமும் இக்கட்டிடத்திலேயே இருக்கிறது. இசைவு பெற்றுத்தான் இதனுட் செல்லலாம்.

### பாராளுமன்றத் தெரு

கவுன்சில் ஹவுசிலிருந்து கனுட் பிளேசுக்குச் செல்லும் அழகிய சாலைக்குப் பாராளுமன்றத் தெரு என்று பெயர். இது ஒரு மைல் நீளமுள்ளது; விசாலமானது; இரு புறங்களிலும் மரங்களையும் அரசியலாரின் கட்டிடங்களையும் டில்லி நகராட்சி அலுவலகங்களையும் உடையது. இந்திய வானொலி நிலையத்தின் அழகிய கட்டிடம் இந்தச் சாலையில் இருக்கிறது. இதன் எதிரே ரிசர்வு பேங்கின் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

### ஜந்தர் மந்தர்

பாராளுமன்றத் தெருவில் பார்க்கத் தக்கதொரு நிலையம் 'ஜந்தர் மந்தர்'. இது வானிலை ஆராய்ச்சிக் கூடம். இதில் ஆறு கட்டிடங்களுள்ளன. இது **1724**–இல் ஜெய்ப்பூர் மஹாராஜாவாகயிருந்த ஜேய்சிங் என்பவரால் கட்டப்பட்டது. கடிகாரம் இன்றியே

நேரம் பார்க்கவும், கதிரவன் ஒளியை ஆராயவும் பருவக் காற்றுக்களின் தன்மைகளை முன்கூட்டி அறியவும் இந்தக் கட்டிடங்கள் பயன்பட்டனவாம். சோதிடம் இரேகை சாத்திர வல்லுநருக்கும் ஜந்தர் மந்தர் பேருதவி யாக இருந்ததாம். இந்தக் கட்டிடங்களின் கருத் தையும் பயனையும் இப்போது ஒருவராலும் விளக்கிச் சொல்ல முடியவில்லையாம். சில நூற்றுண்டுகளுக்கு முன் இந்தியாவில் வான ஆராய்ச்சி உயர் நிலையிலிருந்த தற்கு ஜந்தர் மந்தர் சிறந்த அடையாளமாக விளங்கு கிறது. இதைப் போன்ற வானிலை ஆராய்ச்சி நிலை யங்கள் இப்போது உஜ்ஜயினி, ஜெய்ப்பூர், காசி ஆகிய நகரங்களிலும் இருக்கின்றனவாம்.

கனுட் சர்க்கஸ்

இது புது டில்லியிற் புகழ்பெற்றதொரு கடைத் தெரு; நகரின் அழகான பகுதிகளுள் ஒன்று. கனுட் பிளேஸ் என்னும் வட்ட வடிவமான பூந்தோட்டமும் அதைச் சுற்றிலும் விசாலமானதொரு சாலையும் அமைக்கப்பெற்றுள்ளன. இந்தச் சாலைக்கு உள் வட்டம் (Inner Circle) என்று பெயர். உள் வட்டத்தின் மற்ருெரு புறத்தில் கடைகளுள்ள பெரிய கட்டிடங்கள் உள்ளன. இக் கட்டிடங்களுக்குப் பின்புறத்தில் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் செல்வ தற்காக ஒரு வழியும், அதற்கப்பால் பெரிய கட்டிடங் களும் உள்ளன. அந்தக் கட்டிடங்களின் வாயிலில் பெரிய சாலை ஒன்று உண்டு. கனுட் பிளேசின் நடு இடத்திலிருந்து ஒரு பெரிய வட்டத்தை வரைந்தால், அதனுள் மேற்கூறிய கட்டிடங்களும் அவற்றின் எதிரி லுள்ள வெளி வட்டம் (Outer Circle) என்ற சாலையும்

அடங்கும். கனாட் பிளேஸ், உள் வட்டம் வெளி வட்டம் எல்லாவற்றுக்கும் 'கனாட் சர்க்கஸ்' என்ற பொதுப் பெயர் வழங்கி வருகிறது. ஒவ்வொரு வட்டமும் எட்டுச் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உள் வட்டத்தில் இரு பதிகள் விளையாடுமிடமாக ஒதுக்கப்பெற்றுள்ளன; எஞ்சிய ஆறு பகுதிகளிலும் வெளிச் சுற்றிலுள்ள எட்டுப் பகுதிகளிலும் கட்டிடங்கள் உள்ளன. இந்தப் பகுதிகளுக்குப் 'பிளாக்' என்று பெயர். ஒரு பிளாக்கில் ஒரு கட்டிடம் மட்டுமே உண்டு. ஒரு பிளாக் என்பது ஏறத்தாழ ஒரு பர்லாங்குத் தொலைவு இருக்கும்.

1920-இல் கனாட் கோமகன் இந்தியாவுக்கு வந்தார். அந்த நிகழ்ச்சியின் சின்னமாக இந்தக் கடைத் தெரு கட்டப்பெற்றது. கனாட் சர்க்கஸிலுள்ள கட்டிடங்களெல்லாம் ஒரே உயரத்தில் வட்ட வடிவமாக இருப்பதால், அந்த இடம் எழில் நிறைந்த காட்சியைத் தருகிறது. உலகிலேயே அழகிய இடங்களில் இது ஒன்று என உறுதியாகக் கூறலாம். உள் வட்டத்தின் விட்டம் (Radius) 947 அடி. வெளி வட்டத்தின் அகலம் 160 அடி. பொழுது போகா விட்டாலும் உண்ட உணவு செறிக்க வேண்டுமானாலும் கனாட் சர்க்கசைச் சுற்றி வரலாம்.

கனாட் சர்க்கசை அடையாளம் கண்டு பிடிப்பது மிக எளிது. மற்ற இடங்களில் ஐந்து ரூபாய்க்குக் கிடைக்கும் பொருள்களைப் புது டில்லியில் ஓரிடத்தில் ஏழு ரூபாய் சொல்லுவார்கள். அதுதான் கனாட் சர்க்கஸ். புது டில்லியின் நாகரிகம் உருவாகும் இடம் 'கனாட் சர்க்கஸ்' தான். நாகரிக மங்கையர் பட்டாடை

களோடு அரை நிருவாணத்தில் செல்லுகின்றனர். நவம்பர் மாதக் குளிரில்தான் கனுட் சர்க்கசின் பெருமை உச்சநிலையில் இருக்குமாம்.

கனுட் சர்க்கஸ் பிளாக்குகளுக்கு இடையேயும் எதிரிலும் வாகனங்களை நிறுத்த நல்ல அமைப்புக்கள் செய்யப்பெற்றுள்ளன. கடைகளில் பொருள்கள் நல்ல முறையில் அடுக்கி வைக்கப்படுகின்றன. லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களிலுள்ள வணிகரைப் போலவே கனுட் சர்க்கஸ் வணிகரும் இதை ஒரு நுண்கலையாகக் கருதுகின்றனர். பகல் ஒரு மணி முதல் நான்கு மணி வரை எல்லாக் கடைகளும் பந்த் (மூடப்பட்டு) ஆகி இருக்கின்றன.

**தொழில் முறைகள்**

கனுட் சர்க்கசிலுள்ள கடைகளுள் 'ஸ்நோவைட்' என்பது குறிப்பிடத்தக்கது. இது இயந்திர உதவியால் பட்டு லினன் போன்ற துணிகளைத் துவைத்துத் தரும் கடை. நான்கு மணி நேரத்தில் இப் பணியைச் செய்து விடுவதற்குக் கட்டணம் ஓர் உருப்படிக்கு ரூ. 2–8–0 செலுத்த வேண்டும். இந்தக் கடைக்காரர்கள் அழுக்குத் துணிகளைச் சேர்க்கப் பல இடங்களில் அலுவலகங்கள் வைத்திருக்கிறார்கள். விளம்பரங்களில் இவர்கள் செலவிடும் தொகையும் மிகுதி. இந்தக் கடையைச் சீனர் நடத்துகின்றனர்.

ஒரு வாழைப்பழம் மட்டும் வாங்கினாலும், அதை ஒரு சாணித்தாள் பையில் பேணி வைத்துக் கொடுப்பது புது டில்லியில் ஒரு நல்ல பழக்கம். என் கவனத்தைக் கவர்ந்த மற்றொன்று நாவற்பழம் விற்கும் முறை. சுவையுள்ள பெரிய நாவற் பழங்கள் அங்கே மிகுதி.

எடைபோட்டு நிறுத்தபின், நமக்குத் தரும் பழத்தை ஒரு மண் சட்டியில் போட்டு உப்புப் பொடியைத் தூவுவர். ஓர் இலையால் அந்தப் பாத்திரத்தை மூடி நன்றாகக் குலுக்கி நாவற்பழமும் உப்புப் பொடியும் இரண்டறக் கலந்தபின் நம்மிடம் தருவர். ஹிந்தியில் நாவற்பழத்தை 'ஜாமன்' என்று சொல்லுகிறார்கள். ஒரு பாவ் ஜாமன் விலை மூன்றணு; பாவ் என்பது கால் சேர் அல்லது 20 ரூபாய் எடை.

டில்லியிலே வாழ்பவர்களுக்கு முகத்தலளவை தெரிய வேண்டுவதில்லை. ஏனென்றால் அங்கே எல்லாப் பொருள்களையுமே நிறுத்துத்தான் விற்பதும் வாங்குவதும் வழக்கம். இதைப் பற்றி டில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலரான "சுடர்" என்னும் இதழில் இந்தப் பாடல் வெளிவந்தது:

எல்லாம் நிறை,
எள்ளும் நிறை, கொள்ளும் நிறை.
எலுமிச்சையும் நிறை.
பச்சைமல்லியும் நிறை—நீண்ட
புடலையும் நிறை.
முருங்கையும் நிறை—மக்காச்
சோளமும் நிறை.
டெக்னிகலர் அரிசியும் நிறை.
ஆளைப் பருக்க வைக்கும்
ஆட்டா—கோதுமையும் நிறை.
ஆளை நிறுக்க
எங்கெங்கும் நிறுவைகள் தானே!

சென்னையிலிருந்து, நல்ல வெற்றிலை நாள்தோறும் ஆகாய விமானத்தில் வருகிறது; புது டில்லியில் விற்கப் படும் பான்—பீடா நல்ல இனிப்புச் சுவையுடையது.

எனவே, புதிதாகப் பீடா போடுபவர்களுக்கு மயக்கம் ஏற்படுவதில்லை. வெற்றிலை, பாக்குச் சீவல், சிவப்பு நிறம் தடவிய தேங்காய்த் துண்டுகள், குங்குமப்பூ, பெருஞ் சீரகம், கத்தக்காம்புப் பொடி, ஜிண்டான் மாத்திரை ஆகிய அனைத்தும் சேர்த்து அங்கே பீடா தயாரித்து, அதன்மீது சர்பத்தில் பயன்படுத்தும் எசென்சுகளைத் தெளித்து விற்கிறார்கள்.

டில்லித் தமிழ்ச் சங்கம்

புதுடில்லியில் ஐயாயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். பம்பாய்த் தமிழர்கள் மாதுங்காவில் இருப்பதுபோல் இவர்கள் ஒரே இடத்தில் இல்லை. அனைவரும் 'பைஜாமா'வையே அணிகிறார்கள். இதனால், ஏதாவது தமிழ்ப் பத்திரிகையைக் கையில் வைத்திருந்தால்தான் தமிழர் என்று அடையாளம் கண்டு கொள்ள இயலுகிறது. எனவே, தமிழர்களைப் பற்றிப் புது டில்லியில் பலருக்குத் தெரியாதது இயற்கையே. அங்குள்ள மக்களில் ஒரு சிலருக்குத்தான் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகள் இருப்பது தெரியும். மதராசி என்று ஒரு மொழி இருப்பதாயும் அதைத் தமிழரும் தெலுங்கரும் மலையாளிகளும் கன்னடரும் பேசுவதாகவும் அவர்கள் நினைக்கிறார்கள். தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றி 'டில்லி வாலா'க்களிடம் சொன்னால், "அது ஏற்பட்டு 300 ஆண்டுகள் இருக்குமா?" என்று கேட்பார்கள். இத்தகைய ஓர் இடத்திலிருந்து தலைநகர் தெற்கே மாற வேண்டுமென்று பலர் கிளர்ச்சி செய்வதில் வியப்பில்லை. சர்தார் பட்டேல் இதற்கு முயற்சி செய்த போது, தலைநகரை மாற்றவும் புதிய தலைநகரை அமைக்கவும் 500 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்ற காரணத்தால்

அதைச் சில அலுவலர்களும் அரசியல் பெறும் புள்ளி களும் தடுத்து விட்டனராம்.

பாராளுமன்றத் தெரு கனுட் சர்க்கசுடன் ஒன்று சேரும் இடத்தில் டில்லித் தமிழ்ச் சங்கத்தார் காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அவர்களின் நினைவாகச் சிறிய கட்டிடம் ஒன்றைக் கட்டியிருக்கின்றனர். இங்கே ஒரு நூல் நிலையமும் வாசகசாலையும் உள்ளன. இதன் தலைவர் புகழ்பெற்ற விஞ்ஞானி சர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள். இச் சங்கத்தார் இலவசமாக ஹிந்தி வகுப்புகள் நடத்துகின்றனர். வ. வே. சு. ஐயர் அவர் களின் கம்பராமாயணப் பதிப்பை இவர்கள் அண் மையில் வெளியிட்டிருக்கின்றனர்.

"சவுத் இந்தியா கிளப்" என்ற பொழுது போக்குச் சங்கம் ஜந்தர் மந்தர் ரோட்டில் இருக்கிறது. இங்கே மலிவான விலைக்குப் பொருள்களை விற்கும் கூட்டுறவுப் பண்டசாலையும் உணவு விடுதியும் விளையாடுமிடமும் உள்ளன.

## தியேட்டர்கள்

கனுட் சர்க்கசிலுள்ள பிளாசா, ஓடியன், ரீகல் தியேட்டர்கள் முதன்மையானவை. ரூ. 1—4—0 முதல் ரூ. 25 வரை கொடுத்து இங்கே சினிமாப் பார்க்கலாம். ஆண்டுக்கு நான்கு தடவை தமிழ்ப் படங்கள் காட்டப் படுகின்றன. ஒவ்வொரு தமிழ்ப் படமும் காலை பத்து மணிக் காட்சியில் மட்டும் ஒருநாள் காட்டப்படுகிறது.

## உணவுச் சாலைகள்

எம்பாசி, சாவாய், நிரூலாஸ், வோல்கா, சன்னி காப்பி ஹவுஸ், யுனைடெட் காப்பி ஹவுஸ் என்ற ஏர்

கண்டிஷன் செய்யப்பட்ட சிற்றுண்டிச் சாலைகள் கனுட் சர்க்கசில் இருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு லட்ச ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி யிருப்பவர் உளர். இங்கே இந்த உணவுச் சாலை களுக்குச் சொந்தமான பாண்டு வாத்தியக் குழுக்கள் உண்டு. மாலை நேரத்தில் நல்ல இசை நிகழ்ச்சிகள் நடைபெறும். இந் நிகழ்ச்சிகளின் விவரம் முன்ன தாகவே மாலைப் பத்திரிகையில் வெளியிடப்படும். ஒலிபெருக்கிக் கருவிகளும் இங்கே உள்ளன. காப்பி, தேயிலை, சர்பத் இவை ஒவ்வொன்றும் எட்டு அணுவுக்கு விற்கப்படுகின்றது. ஒரு வடையின் விலை ஆறு அணு. ஒவ்வொரு சிற்றுண்டிக்கும் தனித்தனி பில் கொடுப்ப தும் இங்கு வழக்கம். லண்டனில் சில ஹோட்டல் களில் கிடைக்கும் ஹல்வாவுக்கும் நம் நாட்டு ஹல்வா வுக்கும் பெயரில் மட்டுமே ஒற்றுமை. அது போலவே புது டில்லித் தோசையும் தமிழ் நாட்டுத் தோசையும். தோசை எப்படி இருந்தாலும் ஒரு கத்தியும் குத்துமுள் ளும்(Fork) தருகிறுர்கள். ஐரோப்பியர்கூட ரொட்டி யையும் சர்க்கரைக் கட்டியையும் கையால் எடுப்பதை இவர்கள் அறியவில்லை போலும்.

எம். பிளாக்கில் தமிழ்ச் சிற்றுண்டிச்சாலை ஒன்று இருக்கிறது. சாம்பார் புளிக்காமலிருந்து, சீக்கியர் சிலரும் இல்லாமலிருந்தால் சென்னையிலுள்ள சிற்றுண்டிச் சாலையாகவே இதைக் கருதலாம். புது டில்லி விலைகளைப் பார்க்கும்போது, இங்கே விலைகள் மலிவு என்று கூறலாம். வயிற்றுக்கு மட்டும் தமிழ் உணவு தருவதோடு மன அமைதியடையாமல், இங்கே செவிக்கும் தமிழ் உணவு—தமிழ்ப் பத்திரிகைகள்—தரு

கிறார்கள். இந்த உணவுச் சாலையிற் குறிப்பிடத்தக்க பொருள்கள் இருப்புப் பெட்டகமும், கவர்னர் ஜெனரலுக்கு உணவு அனுப்புபவராக இந்த உணவுச் சாலையை ராஜாஜியின் கட்டளைப்படி நியமித்து, அவருடைய காரியதரிசி அனுப்பிய சர்டிபிகேட்டுமேயாகும்.

**இம்பீரியல் ஹோட்டல்**

குயின்ஸ்வேயிலுள்ள இம்பீரியல் ஹோட்டல் புதுடில்லியில் மிகப் பெரிய ஹோட்டல். பல நூறு அறைகளுடையது. ஒவ்வோர் அறையிலும் வானொலிக் கருவியும் டெலிபோனும் இருக்கின்றன. பல அறைகள் குளிர்காற்றைத்தரும் அமைப்புடன் (Air-conditioning Equipment) கூடியவை. ஹோட்டலுக்குள்ளேயே நல்ல கடைகள் உள்ளன. இது ரெய்சினியா பகுதியிலிருப்பதால் செக்ரடேரியட்டும் தலைமைத் தந்தி அலுவலகமும் இதன் அருகில் உள்ளன. உலகின் சிறந்த ஹோட்டல்களுடன் இதை ஒப்பிடலாம். குறிப்பிட்ட நேரங்களில் லவுஞ் சூட், டின்னர் சூட், ஈவ்னிங் டிரஸ் ஆகிய உடைகள் அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடு இங்கு உண்டு. இந்திய தேசீய உடையையும் அணியலாம் என்பதும், லவுஞ் மண்டபத்தில் ஜவஹர்லால் நேருவின் படம் தொங்கவிடப்பட்டிருப்பதும், சுதந்திரம் கிடைத்தபின் இந்த ஹோட்டலில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள். இங்கு விலைவாசிகள் மிகுதி. இது மன்னர்களுக்கும் கோடீசுவரர்களுக்கும் ஏற்பட்டது. வெளிநாட்டுத் தூதர்கள் ஏழுபேர் இங்கே குடியாக இருக்கின்றனர்; சிலர் தம் அலுவலகத்தையும் இங்கே நடத்துகின்றனர். அரசியல் தொடர்புடைய விழாக்களும் விருந்துகளும் இந்த ஹோட்டலின் பூங்காவில்

நிகழ்கின்றன. இம்பீரியல் ஹோட்டல் வேலையாட்களுக்கு மின்சார வசதியுடன் கூடிய வீடும், உணவும், உடையும் மாதம் 60 ரூபாய்ச் சம்பளமும் வாடிக்கைக்காரரிடமிருந்து வாரத்துக்கு 75 ரூபாய்வரை அன்பளிப்பும் கிடைக்கின்றன. இதனுடன் இணைந்த ஹோட்டல்கள் நம் நாட்டில் பல இடங்களில் இருக்கின்றன. இந்த ஹோட்டல்கள், 'அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்' என்ற ஒரு குழுவினரைச் சேர்ந்தவை.

### பிர்லா மந்திர்

தலைநகரில் தலைசிறந்ததொரு கோயில் ஸ்ரீ லெட்சுமி நாராயணர் கோயில். மூன்று கோடி ரூபாய் வரை செலவு செய்து பிர்லா குடும்பத்தார் இதைக் கட்டியிருப்பதால், பொது மக்கள் இதைப் பிர்லா மந்திர் என்று சொல்லுகிறார்கள். இதை 1939-இல் காந்தியடிகள் திறந்து வைத்தார். கனாட் சர்க்கசிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில், இராமகிருஷ்ண பரமஹம்சருடைய தவப்பள்ளிக்கு அருகே, மலைப் பகுதியில் அமைந்துள்ள இக் கோயில் சநாதனிகள், ஆரிய சமாசத்தார், ஹரிஜனங்கள், புத்தர், ஜெயினர், சீக்கியர் ஆகிய எக்குடிப் பிறந்தோரும் எய்தி வழிபடுதற்குரியது. ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் முஸ்லிம்கள் வரக்கூடாது. பிர்லா கோயில் ஓர் அலுவலகம்போல் கட்டப்பட்டிருப்பதால் இதன் அமைப்புந் தோற்றமும் தென்னாட்டிலுள்ள கோயில்களினின்றும் வேறு பட்டவை. சைகிள் நிறுத்தவும், செருப்பை விட்டுச் செல்லவும் வாயிலில் இடங்கள் உள. இவற்றுக்கு அங்கே ரசீது கொடுக்கப்படுகிறது. இலங்கையில்

கண்டி நகரிலுள்ள புத்தர் கோயில் போன்று இந்தக் கோயிலும் சமய நூல்களுக்குக் காப்பான இடமாக விளங்குவதைக் கண்டு இன்புற்றேன்.

மன்னர்களின் அரண்மனை போல பிர்லா கோயில் காட்சி அளிக்கிறது. கீழ்நாட்டு மேல்நாட்டுக் கட்டிடக் கலைகள் அதில் கலந்திருக்கின்றன. மிகுதியான சூரிய வெளிச்சம், தூய காற்று, சுகாதார அமைப்புக்கள், சலவைக் கற்கள், மின்சார விசிறிகள் ஆகியவை இக் கோயிலில் உண்டு. கோயில் தூய்மையாக இருக்கிறது; நன்கு பேணப்படுகிறது. பளிங்குக் கற்களாற் செய்யப் பெற்ற நல்ல வேலைப்பாடுகள் உள்ளன. செந்நெறியான அறிவுரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. மகாபாரத நிகழ்ச்சிகள் சுவர்களில் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. அசோகர், விக்கிரமாதித்தியர் சிலைகளும், சீன நாட்டு மணியும், புத்தர் கோயிலும், நூல் நிலையமும், அடியார்கள் உண்ணவும் உறங்கவும் வசதியான இடமும், திறந்த வெளியில் ஒரு நாடக மேடையும், பூங்காவும், ஒருகுகையும், யாகசாலையும், சத்திரமும், கீதை படிக்கும் மண்டபமும், கீர்த்தனை மகாலும் இங்கே இருக்கின்றன. இக் கோயிலின் வனப்பைச் சிறப்பித்து அருட்டிரு விபுலாநந்த அடிகள் பாடிய செய்யுள் ஒன்றை ஈண்டுத் தருவோம்:—

வெண்மையும் பொலிவும் விழைதகு வனப்பும்
ஒண்மையு மரீஇ யுரவோர் மனமெனக்
களங்கமற் றோங்கி விளங்குமிந் நியமம்
பொன்னுழி பொருந்திய குடுமி
வெள்ளிக் குன்றென வெண்ணிறச் சலவைக்
கல்லிற் சமைந்த கவினுடைத் தம்ம!

### குதுப் மினர்

இது டில்லியிலேயே உயர்ந்த கோபுரம், குத்புதீனல் கட்டப்பட்டது; டில்லியை ஆண்ட கடைசி இந்து அரசரான மகாராஜா பிருதிவிராஜாவால் 12-ஆம் நூற்ருண்டில் தொடங்கப்பட்டதென்றுங் கூறுவர். இதன் உயரம் 238 அடி. ஏழு மாடிகள் இருந்தன. மேல் இரண்டு மாடிகள் விழுந்து விட்டதால் இப்போது ஐந்து மாடிகளே உள்ளன. அடியிலிருந்து உச்சி வரை 379 படிகள் இருக்கின்றன. உச்சியிலிருந்து பார்த்தால் யமுனை ஆறும், ஜாமா மசூதியும் தெரியும். இருளடர்ந்திருக்கும் இந்த மண்டபத்தில் ஏறுவதென்பது 16 அவுன்ஸ் அரிசி உண்பவர்களால் தான் முடியும். உச்சியிலிருந்து பட்டம் விடுவதற்காகப் படியேறிச் செல்லும் சிறுவர்களும் உண்டு. வாழ்விலும் தேர்விலும் வெற்றி பெருதவர்கள் குதுப்மினரிலேறி உச்சியிலிருந்து விழுந்து உயிர் துறக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றமையால், இப்போது கூட்டமாகச் செல்லுவோர் மட்டுமே கோபுரத்தில் ஏற அனுமதிக்கப்பெறுகிருர்கள். குதுப் இருக்கும் இடத்தில்தான் முதலாவது டில்லி இருந்ததாம். இங்குள்ள அழகான சோலைக்கு ஞாயிறுதோறும் மக்கள் திரளாக வருகின்றனர்.

### புது டில்லியில் யான் கண்டவை

ஆயிரக்கணக்கான பூனைகள், குரங்குகள், லட்சக்கணக்கான மரங்கள், கௌரவமான திருடர்கள், பல ஆயிரம் பிச்சைக்காரர்கள், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சைகிள்கள், 350 பத்திரிகை நிருபர்கள், "நம்பர் பிளேட்" இல்லாத கார்கள், அழிந்துபோன கோட்டைகள், வரலாற்றுப் புகழ்பெற்ற கட்டிடங்கள்,

கோடிக்கணக்கான பைல்கள், சிவப்பு நாடாக்கள், விஷயமறிந்த வட்டாரங்கள், பஞ்சாலைகள், மட்பாண்டத் தொழிற்சாலைகள், மிகச் சிறிய குதிரைப் பந்தய மைதானம், குத்துவிளக்குப்போல் நேராகவும் உயரமாகவும் உள்ள பெண்கள், ரயில் நிலையத்தில் வைஸ்ராய் அல்லது இந்தியக் குடியரசுத் தலைவருக்காகத் தனி 'பிளாட்பாரம்.'

### டில்லி மக்கள் மிகுதியாக விரும்புவது

கடுகு எண்ணெய். இது உணவு சமைக்கவும், மீன் சுடவும், பெண்கள் தலைமயிருக்குத் தடவவும், மீன் பிடிப்போர் பாதுகாப்புக்காக உடலில் தடவிக் கொள்ளவும் பயன்படுகிறது.

### டில்லி மக்களின் பொது உணவு

1. வெள்ளரிக்காய்த் துண்டுகளின் மீது உப்பைத் தூவி எலுமிச்சம் பழச் சாறைப் பிழிந்து உட்கொள்ளுவது. 2. லஸ்ஸீ, இது தயிர், எசன்ஸ், மிட்டாய், சர்க்கரை, ஐஸ் சேர்ந்தது. ஒரு கிளாஸ் லஸ்ஸீயின் விலை ஐந்து அணா. 3. நாள்தோறும் 10 டன் நிறையுள்ள மீன்.

### புது டில்லியின் வாகனம்

டோங்கா; இது ஒருவகைக் குதிரை வண்டி. மோட்டார் சைகிளுடன் இணைக்கப்பெற்ற டோங்கா வண்டிகளும் உள்ளன.

### புது டில்லியில் இல்லாதவை

செவ்வாய்க்கிழமைகளில் குடிவகை விற்பனை, டிராம் போக்குவரவு, ஒரு ரூபாய்க்கு மேற்பட்ட நோட்டைப் பஸ்ஸில் வாங்கிக் கொள்ளும் வழக்கம்.

மழை பெய்தால் குடை பிடித்துக் கொள்ளும் வழக்கம், வேஷ்டி உடுத்துவது, கோணலான தெருக்கள்.

**புது டில்லியில் மிகுதியான உற்பத்தி**

அரசியலாரின் உத்தரவுகள், நாவற்பழம்.

**புதுடில்லியின் உடை**

சௌகிதார். இதற்கு அச்கன் என்றும் பெயர். இது நீண்ட கால் அங்கி. ஜவஹர்லால் நேரு அணிந்து கொள்வது போன்றது. இது சற்றுப் பிடிப்பாக இருக்கும்.

**புது டில்லியில் மிக அழகாக உடை உடுப்பவர்**

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் கே. பி. எஸ். மேனன், ஐ. சி. எஸ்.

**தட்ப வெப்பநிலை**

புது டில்லியில் வெளியிலிருப்பதைவிட, வீட்டிற்குள் பகலில் ஐந்து அல்லது பத்து டிகிரி குறைவான வெப்பமும் இரவில் பத்து அல்லது இருபது டிகிரி கூடுதலான வெப்பமும் இருக்கிறது. இராஜபுதனப் பாலைவனம் அருகில் இருப்பதே இதற்குக் காரணம் என்பர். இப்பாலைவனம் புது டில்லியை விரைவில் அழித்துவிடும் என்று கருதுவோரும் உள்ளனர்.

**புதுடில்லி மக்கள்**

இராமேசுவரத்திலுள்ளவர்களைப் போலவே புது டில்லி மக்களும் வெளியூரிலிருந்து வரும் மக்களை நம்பிப் பிழைக்கிறார்கள். தலைநகர் மாறினால் அவர்கள் கதி அதோகதிதான். கடவுளிடம் வரம் கேட்க இந்துக்கள்

இராமேசுவரத்துக்குச் செல்லுவது போல அரசியலாரிடம் சலுகைகள் பெற எல்லா மதத்தினரும் எல்லா நாட்டினரும் புது டில்லிக்குக் காவடி எடுக்கிறார்கள். தலைநகருக்குள் புகும்போது மகிழ்ச்சியோடு செல்லுபவர்கள், திரும்பி வரும்பொழுது நாடி விழுந்த முகங்களுடன் காணப்படுகிறார்கள். வெளியூர்களில் பெரிய மனிதர்களாக மதிக்கப்படுவோர் தலைநகரில் தங்கள் பெருமையை இழந்து விடுகிறார்கள். அங்கே தவறி விழுந்தால் ஒரு "டிப்டி மந்திரி" மீதோ, ஒரு "ஜாயிண்ட் செக்ரடரி" மீதோ விழவேண்டும்.

புதுச்சேரியில் பெரும்பாலான கட்டிடங்கள் அரவிந்தர் ஆசிரமத்தைச் சேர்ந்தவை. அவ்வாறே புது டில்லியில் பெரும்பாலான கட்டிடங்கள் இந்திய அரசியலாரைச் சேர்ந்தவை. மற்றக் கட்டிடங்களில் ஐதராபாத் மன்னரின் கட்டிடம் மிகச் சிறந்தது. இது பல கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டது. இதுவும் மற்ற மன்னர்களின் மாளிகைகளும் இந்திய அரசியலாரின் உடைமையாகி விட்டன.

பல முறை அரசு மாறினாலும், டில்லி புகழ் பெற்ற நகரமாக, அழியாத நகரமாக, நிலையான நகரமாக விளங்கி வந்திருக்கிறது. அதன் வரலாறு விரிவானது. தனி மனிதர்க்கு நிகழ்வது போன்றே, தலைநகரங்கட்கும் உயர்வு, தாழ்வு உண்டு என்பதை டில்லியின் வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

★

# 2. திரு நிறைந்த நகரம்

## (பம்பாய்)

வெளிநாடுகளில் யான் சுற்றுப்பயணம் செய்த போது யான் ஓர் இந்தியரென அறிந்ததும் பிறநாட்டார் பலர் என்னை ஒரு கேள்வி கேட்டனர். "நீங்கள் பம்பாய் நகரத்தில் வாழ்பவரா?" என்பதே அந்தக் கேள்வி. இதுபோன்ற வினவை ஒவ்வொரு நாளும் எதிர்பார்க்கலாம். இந்திய நகரங்களில் வெளிநாட்டார் நன்கு அறிந்தது பம்பாயே என்பது மேற்கூறியதி லிருந்து தெரியவரும்.

பம்பாய்க்கு ஏன் இவ்வளவு புகழ்? இதை அறிவ தற்குப் பம்பாயின் வரலாற்றை ஒரு சிறிது தெரிந்து கொள்ளவேண்டும். புதுச்சேரி பிரெஞ்சுக்காரரிடம் இருந்து வருவதுபோல், கோவா போர்ச்சுகல் நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. பம்பாயும் 300 ஆண்டு களுக்கு முன்னர்ப் போர்ச்சுகலைச் சேர்ந்த பகுதியாக இருந்தது. 1661-இல் போர்ச்சுகல் அரசால் இங்கிலாந் தின் மன்னரான இரண்டாவது சார்லஸ் என்பவருக்கு பம்பாய் நகரம் சீர்தனமாக வழங்கப்பெற்றது. அவர் அதைக் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு ஓர் ஆண்டுக்கு 10 பவுன் (ரூ. 134,) வீதம் வாடகைக்குக் கொடுத்தார்.

அப்போது இந் நகரம் மீன் பிடிப்பவர்கள் வாழும் ஏழு தனித்தீவுகளாக இருந்தது. மும்பை (Mumbai) என்பது மீன் பிடிப்பவர்களுடைய பெண் தெய்வத்தின் பெயர் என்றும், அதிலிருந்துதான் பம்பாய் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் ஒரு வரலாறு உண்டு. இப்போதும் ஆகாய விமானத்திலோ, கப்பலிலோ வருபவர்களுக்கு இந்த ஏழு தீவுகளும் முத்து மாலை வடிவில் காட்சி தருகின்றன. கடலைத் தூர்த்து இந்தத் தீவுகள் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நகரை விரிக்கும் வேலை (Land Reclamation Work) பம்பாயில் இன்னும் நிகழ்ந்து வருகின்றது. சூயஸ் கால்வாய் ஏற்பட்டது முதல் பம்பாய், ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் வணிக வாயிலாக இருந்து வருகிறது. இந்தியாவுக்குக் கடல் வழியாக வந்த ஐரோப்பியரும் அமெரிக்கரும் இந் நகரிலேயே வந்திறங்கினர். ஆகாய விமானப் போக்கு வரவு ஏற்பட்ட பின்னரே அவர்கள் கராச்சியில் கால் வைக்கத் தொடங்கினர். நம் நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் பயனாகக் கராச்சி விமான நிலையம் பாக்கிஸ்தானுக்குச் சேர்ந்து விட்டபடியால், மேற்கத்திய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் விமானங்களும் இப்போது பம்பாயில்தான் இறங்குகின்றன. இந்தியாவுக்கு வராத வெளிநாட்டாரும் பம்பாயிலுள்ள வணிகருடனேயே பெரும் அளவு வியாபாரம் செய்கின்றனர். ஐரோப்பியர், யூதர், ஆப்கானியர் போன்ற பல நாட்டு மக்கள், ஏனைய இந்திய நகரங்களைவிடப் பம்பாயில் தான் கூடுதலாக இருக்கின்றனர். "லண்டன் இங்கிலாந்தைச் சேர்ந்தது; ஆனால் பாரிஸ் உலகம் அனைத்துக்கும் பொதுவானது" என்று ஆங்கிலத்தில் ஒரு

பழமொழி உண்டு; அதைப் போன்றே, "ஏனைய நகரங்கள் இந்தியாவைச் சேர்ந்தன; ஆனால் பம்பாய் உலகின் பொது நகரம்" என்று கூறலாம்.

**பார்சிகள்**

பம்பாயில் வியாபாரம் செய்யும் இந்தியருள் இரு சமூகத்தார் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள். ஒன்று பார்சிகள். மற்றொன்று ஜெயினர்கள். பார்சிகள் என்பவர்கள் ஜோராஸ்தர் (Zoraster) மதத்தைச் சேர்ந்தவர்கள். பழங்காலத்தில் ஈரான் நாட்டுக்குப் "பெர்சியா" என்று பெயர் இருந்தது. பெர்சியாவில் தோன்றியதால் இந்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு, "பார்சிகள்" என்ற பெயர் ஏற்பட்டது. இஸ்லாம் மதம் பெர்சியாவுக்குப் பரவியதும், பார்சிகள் பெர்சியாவிலிருந்து இந்தியாவின் மேற்குக் கரைக்கு ஓடிவந்தனர். இவ்வாறு 1300 ஆண்டுகளுக்கு முன் ஓடிவந்த பார்சிகளுள் அநேகமாக எல்லோருமே பம்பாயில்தான் இப்போது இருக்கிறார்கள். இவர்கள் தொகை ஏறத்தாழ ஒரு லட்சம். இவர்கள் குஜராத்தி மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் திருமண முறைகளில் இந்துக்களையே பின்பற்றுகின்றனர். கலப்பு மணம் செய்வது இவர்களுள் அருமை. தங்களுடைய தனிப்பட்ட பழக்க வழக்கங்களை இவர்கள்—பிறரது இடையூறின்றிக் — கடைப்பிடித்து வருகின்றனரெனினும் இந்திய நாட்டு மக்களுடன் தாமும் இரண்டறக் கலந்துவிட்டனர். இவர்களுக்கும் இன்றைய ஈரானுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

பார்சிகள் இறந்தவர்களை எரிப்பதில்லை; புதைப்பதுமில்லை. அமைதிக் கோபுரம் (Tower of Silence)

என்ற கோபுரத்தை இவர்கள் கட்டியிருக்கிறார்கள். பிரேதங்களை அந்தக் கோபுரத்தில் வைத்து, அவற்றைக் கழுகுகளுக்கு இரையாகக் கொடுத்து விடுவது பார்சிகளுடைய வழக்கம். தர்மம் செய்வதுதான் இச்சமூகத்தாரின் அருங்குணம். தம் உடலைப் பிறருக்குக் கொடுப்பது ஏனைய தர்மங்களைவிட உயர்ந்தது என்பது இவர்களுடைய கோட்பாடு. இவர்கள் சூரியனையும், நெருப்பையும், பூமியையும் வணங்குவார்கள். தங்களுடைய கோயில்களில் நெருப்பை வளர்ப்பதற்காக, பார்சிகள், சந்தனக்கட்டைகளை மட்டுமே பயன்படுத்துவர். மைசூர் இராச்சியத்தில் சந்தன மரம் உள்ள தோட்டங்களை இதற்கெனப் பார்சிகள்—தங்கள் கோயில்களின் பெயரால்—மிகுதியாக வாங்கி யிருக்கின்றார்கள்.

பார்சிகள் தொழில் துறையில் சிறந்து விளங்குகின்றார்கள். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் போலவே பார்சிகளும் வியாபாரத்தில் பெரிதும் ஈடுபட்டு வருகிறார்கள். இரு சமூகத்தாரும் மிகச் சுறுசுறுப்பானவர்கள். செட்டியார்களைப் போலவே பார்சிகளிலும் ஏழைகள் பலர் இருக்கின்றனர். பார்சிகளுள் ஏழைகள் வீடுகளிலும் நல்ல நாற்காலி, மேசை, கட்டில் முதலியவற்றைக் காணலாம். அவர்கள் மேற்கத்திய நாகரிகத்தில் ஈடுபட்டிருப்பதே இதற்குக் காரணம். செல்வர்கள் தம் சமூகத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கு உதவி வருவதால், பொதுவாக, பார்சி சமூகத்தாருடைய பொருளாதார நிலை சிறப்பாகவே இருந்து வருகிறது. பல தொழிற்சாலைகளை நிறுவி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்

திருக்கின்ற டாட்டா குடும்பத்தார் பார்சிகளே ஆவார்கள். இக் குடும்பத்தார் தம் சமூகத்திலுள்ள ஏழைகளுக்காகக் கோடிக்கணக்கான ரூபாயை வாரி வழங்கியுள்ளனர். பார்சி சமூகத்திலுள்ள மற்ற செல்வர்களும், (தாம் இறக்கு முன்னர் ஒவ்வொரு பார்சியும் எழுதி வைக்கும்) இறுதி ஏற்பாட்டில் (Will) ஒரு தொகையைப் பார்சி பஞ்சாயத்து என்ற கழகத்திற்கு ஒதுக்கி வைக்கிறார்கள். இப் பொருள்களைக் கொண்டு இக் கழகத்தார் பார்சிகளுள் ஏழையாயுள்ளவர்களுக்கும், வேலை இல்லாதவர்களுக்கும் (வேலை கிடைக்கும் வரையில்) பொருளுதவி செய்து வருகின்றனர். ஏதாவது ஒரு தொழிலைச் செய்வது இவர்களுடைய வழக்கம். மெர்ச்சண்ட் (வியாபாரி), என்ஜினியர் (பொறியியற் கலை வல்லார்), போன் செட்டர் வாலா (முட வைத்தியர்), சோடா வாட்டர் பாட்டில் வாலா, காண்ட்ராக்டர், தலால் (தரகர்), மேட்டா (கணக்குப் பிள்ளை) போன்ற தொழிற் பெயர்கள் இவர்களுள் உண்டு. சிலர் ஐரோப்பியரைப் போன்றும் பெயர்கள் வைத்துக் கொள்ளுகின்றனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையான காமன்சு சபையில் இதுவரை உறுப்பினராயிருந்திருக்கிற இந்தியர் மூவரும் பார்சிகளே. இச் சிறப்பை முதலில் அடைந்தவர் தாதாபாய் நவுரோஜி என்பார்; இவர் மும்முறை காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். காங்கிரசுத் தலைவராயிருந்த சர் பிரோஷ் ஷா மேட்டாவும், பார்சி வகுப்பைச் சேர்ந்தவரே.

**ஜெயினர்கள் :-**

ஜெயின மதத்தைச் சேர்ந்தவர்களும், பம்பாயில் மிகுதியாக இருக்கின்றன ரென்பதை முன்னரே குறிப்பிட்டோம். ஜெயின மதம் இந்து மதத்திலிருந்து ஒரு சிறிதே வேறுபட்டது. ஜெயின மதம் ஒரு காலத்தில் தமிழகத்திலும் பரவியிருந்தது. ஐம்பெரும் காப்பியங்களிற் சில ஜெயினமதத் தொடர்புடையன; இப்போதும் சோழ நாட்டில், பல இடங்களில், ஜெயின சமயத் தொடர்புடைய கல் விக்கிரகங்கள் காணப்படுகின்றன. பம்பாயில் ஜெயின வணிகர் 8,000 பேர் உள்ளனர். பிர்லா, டால்மியா ஆகிய பெரு வணிகரெல்லாம் ஜெயினரே. கல்கத்தாவிலும் வேறு பல இடங்களிலும் வியக்கத்தக்க முறையில் இவர்கள் அழகிய கோயில்களை அமைத்துள்ளனர். பம்பாயில் பைகுலா என்னும் பகுதியில் ஜெயினருடைய கோயில் இருக்கிறது. அங்கே ஜெயின மதத்தைச் சேர்ந்த சாமியார்களும் உள்ளனர். இந்தத் துறவிகளுக்கு ஐந்து கட்டுப்பாடுகள் உண்டு. அவையாவன :— எந்த உயிரையும் கொல்லக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. பண வரவு செலவு செய்யக் கூடாது. எந்தப் பெண்ணையும் தொடக் கூடாது. எப்பொழுதும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் இருக்க வேண்டும்.

**தொழிற் சிறப்பு :-**

பம்பாயில் நடைபெறாத தொழிலே இந்தியாவில் இல்லை எனலாம். நூற்றுக்கணக்கான பஞ்சாலைகள், பட்டு ஆலைகள், சைகிள் தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை, எல்லா வகையான இயந்திரங்களையும் செப்பனிடும் தொழிற்சாலைகள், சிமெண்டுத் தொழிற்

சாலை ஆகியவை பம்பாய் நகரிலும் அதையடுத்தும் இருக்கின்றன. பம்பாயில் இவ்வளவு மிகுதியாகத் தொழில்கள் பெருகியிருப்பதற்குக் காரணம் அங்கே மின்சார சக்தி மிக மலிவாகக் கிடைப்பதுதான். இந்தியாவிலேயே குறைந்த விலைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்றுவரும் டாட்டா ஹைட்ரோ எலக்ட்ரிக் கம்பெனிகள் இந்தச் சிறப்புக்கு உரியவர்கள். பம்பாய் மக்கள் மின்சாரத்தை மட்டும் நம்பிக் கொண்டிருக்கவுமில்லை.வீடுகளில் சமையல் செய்வதற்கு 'காஸ்' (Gas) அடுப்பைத்தான் பெரும்பாலோர் பயன் படுத்துகின்றனர். குளிர்காலத்தில் குளிப்பதற்கு, பெரும்பாலான வீடுகளில் எலக்ட்ரிக் கெய்சர் (Geyser) வசதி இருக்கிறது. பம்பாயில் பல மாதங்களில் மழை மிகுதி என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

பம்பாயின் தொழிற் சிறப்புக்கு மற்றொரு காரணம் அங்கே இருக்கும் போக்கு வரத்து வசதிகள். பம்பாயின் விமான நிலையமான "சாந்தா குரூஸ்" ஒரு 'பஸ் ஸ்டாண்டு' போன்றது; அங்கிருந்து—இடையில் எங்கும் நிற்காமல்—டில்லி, ஆமதாபாத், ஜெயப்பூர், கல்கத்தா, சென்னை, ஐதராபாத், பெங்களூர், திருச்சி ஆகிய நகரங்களுக்கும், இலங்கை, பாக்கிஸ்தான், ஈரான், இராக், இஸ்ரேல், எகிப்து, கிழக்கு ஆப்பிரிக்கா, போன்ற நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகள் பலவற் றிற்கும், அமெரிக்காவுக்கும் நாள்தோறும் ஆகாய விமானங்கள் செல்லுகின்றன.

பம்பாய்த் துறைமுகத்தின் சிறப்பை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். உலகின் பெரிய கப்பல்களெல் லாம் அடிக்கடி இந்த இயற்கைத் துறைமுகத்

திற்கு வந்து சென்ற வண்ணமாயிருக்கின்றன. பம்பாயிலிருந்து இந்தியாவின் எப் பகுதிக்கும் ரயிலில் செல்லலாம். மேற்குப் பகுதிக்கு ரயில்வேத் தலைநகர் பம்பாயே. பம்பாயிலுள்ள விக்டோரியா டெர்மினஸ் தான் இந்தியாவில் மிகப் பெரிய ரயில் நிலையம்; உலகில் இது நான்காவது பெரிய ரயில் நிலையம் என்பர்.

பம்பாய் நகருக்குள் இயங்கும் வாகனங்களுள் நம் கண்ணையும் கருத்தையும் கவருவது விக்டோரியா என்னும் "குதிரைக் கோச்சு". மின்சார டிராம் என்னும் வாகனம் உலகிலேயே சென்னையில்தான் முதலில் ஏற்பட்ட போதிலும் மாடியுள்ள டிராம்கள் பம்பாயிலேயே உள்ளன; மாடியுடன் கூடிய வாகனங்கள் சென்னையில் இல்லை. பம்பாயில் மாடியுள்ள பஸ்கள் உள்ளன. மின்சார ரயில்களும் பம்பாய் நகரைச் சுற்றுப்புறங்களுடன் இணைக்கின்றன. பூனாவிலிருந்து கூட நாள்தோறும் பம்பாய்க்கு வந்து அலுவல்களைக் கவனித்துவிட்டுச் செல்பவர்கள் உள்ளனர்.

சென்னையிலிருந்து பாம்பாய்க்குச் செல்லும் ரயில் பாதையில் 'பூனா' நகரம் இருக்கிறது. பம்பாய்க்கும் பூனாவுக்கும் 120 மைல் தொலைவு. இவ் இரு நகரங்களுக்கும் மூன்று மணி நேரத்தில் செல்லும் 'டெக்கான் குயீன்' என்னும் விரைவான ரயில் போக்கு வரவு உண்டு. இந்த வழியில் மலைகளைக் குடைந்துகொண்டு, அவற்றின் ஊடே ரயில் செல்லும்போது, அது கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். மழைக் காலத்தில், இப் பகுதியின் இயற்கை அழகு மேலும் இன்பம் தரும்.

சினிமா :-

வியாபாரத்திற்கு அடுத்தபடி சினிமாத் துறையில் பம்பாய் புகழ்பெற்றிருக்கிறது. மெட்ரோ, லிபர்டி, ஈராஸ், ஆகிய பெரிய தியேட்டர்கள் இங்கு உள்ளன; இவை 'ஏர் கண்டிசன்' செய்யப்பெற்றவை. சினிமாப் படம் எடுக்கும் தொழிலும் இந் நகரில் சிறப்பாக இருக்கிறது. செய்திப் படங்களை எடுக்கும் அரசாங்க அலுவலகம் இந் நகரிலேயே இருந்து வருகிறது; பம்பாய் நகரக் காட்சிகள் இப் படங்களில் மிகுதியாய்க் காட்டப்படுவதற்கு இது ஒரு காரணமாக இருக்கக் கூடும். தேவ் ஆநந்து, சூரையா போன்ற நடிக நடிகைகள் வாழும் சிறப்பும் பம்பாய் நகருக்கு உண்டு.

விளையாட்டுகள் :-

விளையாட்டுகளுக்குப் பம்பாயில் ஆதரவு மிகுதி; பார்சி ஜிம்கானு, இந்து ஜிம்கானு, முஸ்லிம் ஜிம்கானு, ஐரோப்பிய ஜிம்கானு போன்ற பல விளையாட்டு மைதானங்கள் அங்கு உள. இவர்களுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியே குவாட்ராங்குலர் கிரிக்கெட் மாட்சஸ் (Quadrangular Cricket Matches) என்பது. இந்தத் திறந்த வெளிகள் பம்பாயை அழகு படுத்துகின்றன. இரண்டு பெரிய ஸ்டேடியங்கள் பம்பாயில் இருக்கின்றன; இவை உலகிற் சிறந்த ஸ்டேடியங்களுடன் வைத்து எண்ணத்தக்கவை. ஒன்று பிராபர்ன் ஸ்டேடியம். மற்றொன்று வல்லபாய் பட்டேல் ஸ்டேடியம். முன்னது கிரிக்கெட் ஆட்டத்திற்கு மட்டுமே பயன்படுவது; பின்னது ஹாக்கி, டென்னிஸ், கால் பந்து, சைகிள் பந்தயம், ஆகிய ஆட்டங்கள் நிகழ்வதற்கேற்ற அமைப்புடன் கூடியது. இது இந்த

ஆண்டில் 17 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பெற்றது. கிரிக்கெட் ஆட்டத்தைப்பற்றி வானொலியில் விமர்சனம் செய்து புகழ் பெற்றிருக்கிற ஏ. எப். எஸ். டலேயர்கான் என்பவர் பம்பாய்க்காரர்தான்.

"பல் வலியால் துன்பப்படுபவன், தன்னைத் தவிர உலகில் அனைவரும் நலமாயிருப்பதாக எண்ணுகிறான்; ஏழைகளும் பணக்காரரைப் பற்றி இப்படியே தவருக முடிவு செய்துவிடுகிறார்கள்" என்று பெர்னார்ட்ஷா சொல்லியிருக்கிறார். பம்பாயைப் பற்றியும் அந் நகருக்குச் செல்லாதவர்களுக்கு—பம்பாய் அன்றாட வாழ்வு எல்லையற்ற இன்பம் நிறைந்தது என்று—தவறான கருத்துக்கள் இருக்கலாம். பம்பாயில் குடியிருக்க ஓர் அறை (வீடு அன்று) கிடைப்பது எளிதன்று. இந் நகரில் —லண்டன், பாரிஸ் நகரங்களை விட—வாடகை கூடுதலாக இருக்கிறது. 145 பேர் மட்டும் ஓர் ஆண்டுக்கு ஐந்து கோடி ரூபாய் வாடகை வசூலித்துக் கொள்கிறார்களாம்; பம்பாயிலுள்ள கட்டிடங்களில் மூன்றில் ஒரு பகுதி 440 பேருக்கு மட்டுமே உரியது. ஏனைய இரண்டு பங்குகள் பல லட்சம் பேரைச் சேர்ந்தன. பம்பாயில் இப்போது 40 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களுள் பாதிப்பேரை அந்தமான் தீவுகளுக்கு அனுப்பி விட்டால், பம்பாய் எவ்வளவு இனிய நகரமாக விளங்கும்! பம்பாய் எழில் நிறைந்த நகரம்தான்; ஆனால் மக்கள் கூட்டம் மிகுதியா யிருப்பதால் சாலைகளில், ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு தான் செல்லவேண்டியிருக்கிறது. பம்பாயில் பொருள்கள் வாங்க, கடைகளுக்குப் போய் வந்தால் அரை நாளில் அரை உயிர் போய்விடுகிறது; ஒரு நாளில்..............

இந்தத் துன்பங்களை எல்லாம் மறந்து விடவேண்டு மாயின் "மலபார் ஹில்" மலைக்குச் செல்லுவோம். பம்பாயின் வனப்பை இங்கிருந்துதான் கண்டு மகிழ லாம். இங்கேதான் ஹாங்கிங் கார்டன்ஸ் Hanging Gardens என்னும் அழகிய பூங்கா பம்பாய் நகருக்கென ஏற்படுத்தப்பெற்ற தண்ணீர்த் திட்டத் தின்மீது நிறுவப் பெற்றிருக்கிறது. இதைப்பற்றி, பம்பாய் மக்கள் பெருமிதம் அடைவதுண்டு. இதற்கு அருகில்தான் பார்சிகளுடைய அமைதிக் கோபுரம் இருக்கிறது. "மலபார் ஹில்" பகுதி யில் கவர்னரின் மாளிகையும், பெருஞ் செல்வர் களின் "அரண்மனை"களும் உள்ளன. "மலபார் ஹில்"லி லிருந்து கீழே இறங்கி வரும்போது இருக்கும் பகுதி ப்ரீச் கண்டி என்பது. இங்கு தூய குளிர் காற்று வீசிக் கொண்டிருக்கும். ஒரு காலத்தில் இங்கே ஐரோப் பியர் மட்டுமே கடலில் நீராடலாம் என்றிருந்தது. இப் பகுதியின் அருகே பம்பாயின் கிண்டியான மகாலட்சுமி குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. அதையடுத்து நூல் ஆலைகளும், தொழிலாளர் வாழும் இடங்களும் உள்ளன. இவற்றின் நடுவே விக்டோரியா கார்டன்ஸ் என்னும் பூங்கா இருக்கிறது.

விக்டோரியா கார்டன்சில்தான் பம்பாயின் உயிரினக் கூடம் இருக்கிறது. அழகிய பூந்தோட்டமும் இந்த உயிரினக் கூடமும் விக்டோரியா அரசி ஏற்படுத்திய ஒரு நிதியிலிருந்து உருப்பெற்றன. உள்ளே செல்வதற்கு எந்த விதமான கட்டணத்தையும் ஏற்படுத் தாத உயிரினக்கூடம் உலகிலேயே இது ஒன்றுதான். செல்வர்களுக்கும் செல்வம் இல்லாதவர்களுக்கும்

உள்ள வேறுபாடுகளைப் பம்பாயின் பல இடங்களில் காணலாம். ஆனால் இங்கே இவ்விரு சாராரும் உயிரினங்கள்பால் தமக்குள்ள உள்ளன்பை வெளிப் படுத்திக் கொள்ளலாம். இந்தத் தோட்டங்கள் நல்ல முறையில் பேணப்பட்டு வருகின்றன. குடிதண்ணீர் இங்கே நாள் முழுவதும் கிடைக்கிறது. பொழுது போக்குவதற்கு இது ஏற்ற இடம்.

விக்டோரியா கார்டன்சுக்கு அப்பால் இந்துக்களின் கோயில்களும், கடைத் தெருக்களும் உள்ளன. இங்கே பார்க்கத்தக்கன கிராபோர்ட் மார்க்கட்டும், கலைக் கல்லூரியும் (J. J. School of Arts). கிராபோர்ட் மார்க் கெட்டில் கிடைக்காத பொருளே இல்லை யெனலாம். அங்கே பழங்கள் விற்கும் பகுதியும் முக்கியமானது. மிகப்பெரிய ஆரஞ்சுப் பழங்களும், வகை வகையான மாம்பழங்களும், டாக்டர் மு. வரதராசன் அவர்களின் நாவல்களில் நீங்கள் படித்திருக்கும் காபூல் திராட்சைகளும் கிடைக்கும். நாம் முன்னர்க் குறிப்பிட்ட விக்டோரியா டெர்மினஸ் இந்த மார்க்கட்டுக்கு அருகாமையிலேயே இருக்கிறது. விக்டோரியா டெர்மினசுக்கு அருகே பம்பாய் நகராண்மைக் கழகத்தின் அலுவலகங்கள் உள்ளன. இங்கிருந்து ஹார்ன்பி ரோடு வழியாகச் சென்றால் இந்தியாவின் தலைவாயிலை அடையலாம். ஹார்ன்பி ரோடிலும், ஸர் பெரோஷ்ஷா மேட்டா ரோடிலும் மிகப் பெரிய கடைகளும், ஏராளமான பாங்குகளும், இன்சூரன்ஸ் கம்பெனிகளும், ஏனைய வணிக நிலையங்களும் இருக்கின்றன.

கேட்வே ஆப் இந்தியா (இந்தியாவின் தலைவாயில்) என்பது கடற்கரையில் கல்லால் கட்டப்பட்டிருக்

கின்ற ஒரு பெரிய வளைவு. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வந்ததை ஒட்டி இம் மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. இது இந்தியாவின் சிற்பக் கலைக்கு அணிகலனாக விளங்குகின்றது. இப் பகுதிக்கு அப்பல்லோ பந்தர் என்று பெயர்.

இந்தியாவின் தலைவாயிலுக்கு அருகே பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மியூசியம் இருக்கிறது. இது மிகச் சிறந்த ஒரு பொருட்காட்சி மண்டபம். எந்தப் பொருட்காட்சி மண்டபத்தையும் ஒரு நாளில் காண்பது இயலாது; இரண்டு மணி நேரத்தில் பார்த்து முடித்து விடலாமென்று திட்டம் போடாதீர்கள். இந்த மண்டபத்தில் இயற்கை வரலாற்றை விளக்கும் பகுதி உலகிலேயே வேறு எங்கும் இல்லாதபடி சிறப்பாக அமைந்திருக்கிறது. இம் மண்டபத்திலுள்ள பல பொருள்கள் பார்சி பெருமக்களால் அன்பளிக்கப் பெற்றவை. பழங் காலத்துக் கடிகாரம் ஒன்று இம் மண்டபத்தில் உள்ளது. இக் கடிகாரத்தில் எண்கள் தமிழ் இலக்கத்தில் குறிக்கப் பெற்றிருப்பதைக் காணத் தவறாதீர்கள்.

இந்தியாவின் தலைவாயிலுக்கு எதிரே தாஜ்மஹால் ஓட்டல் இருக்கிறது. இது மிகப் பெரிய உணவு விடுதி. இங்கே மன்னர்களும், மிகப் பெரும் செல்வர்களும் தங்கி யிருப்பார்கள். இங்கிருந்து சில நிமிடங்களில் பிராபர்ன் ஸ்டேடியத்தை அடையலாம். அதற்கு அருகேயே பம்பாயின் சிறந்த சாலையான மெரைன் டிரைவ் (Marine Drive) இருக்கிறது. இதன் ஒரு மருங்கில் கடலும், மற்றொரு மருங்கில் பல அடுக்கு மாளிகைகளும் உள்ளன. இவற்றின் அழகைப் படத்தில் காணலாம். மெரைன் டிரைவின் ஓர் எல்லையில்

சௌபாத்தி என்னும் திறந்த வெளி இருக்கிறது. இது சென்னையில் திலகர் கட்டம் போன்றது. இக் கடற்கரையில்தான் பல ஆண்டுகளாகக் காங்கிரசுப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. காங்கிரசு இயக்கமே பம்பாயில்தான் தோன்றியது. அதனுடைய பொன்விழா 1934-இல் பம்பாயில்தான் நடைபெற்றது. "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கத்துடன் இந்தியாவின் அரசியல் விடுதலை இயக்கத்தின் இறுதிப் போராட்டத்தை காங்கிரஸ் 1942-இல் தொடங்கியதும் பம்பாயில்தான்.

பம்பாயில் மிகுதியான ஓட்டல்களை ஈரானியரே நடத்துகின்றனர். தென் இந்திய உணவு தரும் சிற்றுண்டி, பேருண்டிச் சாலைகளும் பம்பாயில் சில இடங்களில் உள்ளன. பம்பாயின் சுற்றுப்புறங்களில் ஒன்றான மாதுங்காவில் தமிழர்களே பெரும்பாலாக வாழ்கின்றனர். அவர்களுடைய தொகை இரண்டு லட்சம் இருக்கலாம். அவர்கள் தங்கள் வருவாய்க்காகவே தமிழகத்திற்கு அப்பால் வாழ்ந்த போதிலும் தம் மொழியை மறந்துவிடவில்லை. பம்பாய்த் தமிழ்ச் சங்கம் என்ற ஒரு கழகத்தைத் தொடங்கி அதன் வாயிலாகக் கடந்த பல ஆண்டுகளாக அவர்கள் தங்களுடைய மொழிப்பற்றை வளர்த்து வருகிறார்கள்.

**பம்பாய் வாசிகள் மிகுதியாக விரும்புபவை :-**

கிரிக்கெட், பம்பாய் அல்வா, பிளிட்ஸ் பத்திரிகை, வளையல்கள்.

பம்பாயில் ஊதுபத்தித் தொழிற் சாலைகள் மிகுதியாக இருக்கின்றன. பம்பாயில் சில லட்சம் அகதிகளும்,

நூற்றுக்கணக்கான கோடீசுவரர்களும் "சட்டா" வியாபாரம் செய்யும் சூதாடிகளும், தங்கம் வெள்ளி விலைகளை ஏற்றி இறக்கி விளையாடும் "சோக்ஸி" குடும்பத்தாரும், வருமான வரியைச் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றும் பெரிய மனிதர்களும், மஞ்சள் தலைப்பாகை அணிந்த மார்வாரிகளும் ஏராளமாக இருக்கிறார்கள்.

உலகச் சுற்றுப் பயணத்திற்குச் சில முன்னேற்பாடுகள் செய்வதற்காக நான் (முதல் தடவை) 1948-இல் பம்பாய்க்குச் சென்றேன். அந்த நகரின் பூங்காக்களும் மலைகளும் சிறந்த துறைமுகமும் முத்து மாலை போன்ற உருவுடைய கடற்கரையும் ஆகாய விமானத்திலிருந்தே தோற்றம் தந்தன; புதிய புதிய காட்சிகள் உள்ளத்தைக் கவர்ந்தன. பம்பாயில் தங்குவதற்கு வெளியூரிலிருந்து வருகின்றவர்கள் தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும். என்னுடைய நண்பர் ஒருவர் எனக்கு மாடர்ன் இந்து ஓட்டலில் இடம் ஒழுங்கு செய்திருந்தார். அப்போது நான் கண்ட நகரங்களில் பம்பாயே மிகப் பெரியது; ஆகையால் அங்குள்ள பல அடுக்கு மாளிகைகளும், மக்கள் நெருக்கமும் வாகனங்களின் மிகுதியும் எனக்குப் பெரும் மலைப்பாகவே இருந்தன. அதுமுதல் பம்பாய் என் மனத்தில் நிலையான இடம் பெற்றுவிட்டது. நியூயார்க் நகரத்தையும் பம்பாயை அளவுகோலாகக் கொண்டு தான் யான் பார்த்தேன். "அமெரிக்காவைப் பார்" என்னும் நூலில் யான் எழுதியிருக்கும் பின்வரும் பகுதி இங்கே குறிப்பிடத் தக்கது.

"நமது நாட்டில் செல்வ நிலையிலும், மற்றும் பல துறைகளிலும் பம்பாய் முதன்மையாயிருப்பது போல,

அமெரிக்காவில் நியூயார்க் இருக்கிறது. பம்பாயில் தலால் தெருவிலுள்ள பங்கு, பருத்தி, தங்கம், வெள்ளி மார்க்கட்டுகள் இந்தியாவுக்கு எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே நியூயார்க்கின் வால் ஸ்ட்ரீட் உலகப் பொருளாதாரத்தையே சீராக்கவும் சீர்குலைக்கவும் வல்லது. எனினும் பம்பாய் இந்தியாவின் தலைநகராக இல்லாதது போலவே, நியூயார்க் அமெரிக்காவின் தலைநகராகவோ நியூயார்க் இராச்சியத்தின் தலைநகராகவோ இல்லை. (நியூயார்க் இராச்சியத்துக்குத் தலைநகர் ஆல்பனி என்ற ஒரு சிற்றூரே ஆகும்.) பம்பாயைப் போல நியூயார்க்கும் ஒரு தீவு. இந்தியப் பஞ்சு ஆலைத் தலைநகராகப் பம்பாயும், அமெரிக்கப் பஞ்சு ஆலைத் தலைநகரமாக நியூயார்க்கும் இருக்கின்றன. இந்தியத் துணியில் 15 சதவீதம் பம்பாய்த் தீவிலும் அமெரிக்கத் துணியில் 75 சதவீதம் நியூயார்க் தீவிலும் உற்பத்தி ஆகின்றன. பம்பாயில் பார்சிகளும் நியூயார்க்கில் யூதர்களும் மிகச் சிறுபான்மையினரே. (அமெரிக்காவில் ஐந்தில் நான்குக்கு மேற்பட்டவர் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர். அங்கே நிலவும் அடுத்த பெரிய மதம் யூத மதம்.) எனினும், இரு நகரங்களிலும் இச் சிறுபான்மையோரே பொருளாதார வலுவுள்ள வகுப்பினராக இருக்கின்றனர். ஐரோப்பியருக்கு இந்தியாவின் தலைவாயில் பம்பாய்; அமெரிக்காவின் தலைவாயில் நியூயார்க். பம்பாய்க்கு வருபவர்களை இந்தியாவின் தலைவாயில் (Gateway of India) என்ற மண்டபமும், நியூயார்க்குக்கு வருபவர்களைச் "சுதந்திரச் சிலை"யும் எதிர்கொண்டழைக்கின்றன. மற்ற இந்திய நகரங்களைவிட பம்பாய் உலக முழுவதும் தெரிந்திருப்பது போல

ஏனைய அமெரிக்க நகரங்களைவிட நியூயார்க் உலகப் புகழ் பெற்றுள்ளது. கோடிக்கணக்கான இந்தியர் பம்பாயைப் பார்க்காதது போலவே கோடிக்கணக்கான அமெரிக்கரும் நியூயார்க்கைப் பார்த்ததில்லை! பம்பாயில் பல ஆயிரம் வெளிநாட்டார் இருக்கிறார்கள்; நியூயார்க்கில் பல லட்சம் வெளி நாட்டார் உளர். பம்பாயில் நான்கு, ஐந்து மாடிக் கட்டிடங்கள் மிகுதியாக இருப்பதுபோல, நியூயார்க்கில் நாற்பது, ஐம்பது மாடிக் கட்டிடங்கள் பல இருக்கின்றன. பம்பாயைப் போலவே நியூயார்க்கிலும் மனிதனை மனிதன் இழுக்கும் நாகரிகமாகிய சென்னையின் ரிக்ஷா வாகனம் கிடையாது."

பம்பாய் நகரை யடுத்து, பார்க்கத்தக்க இடங்கள் இரண்டு உள்ளன. ஒன்று ஜூஹூ; மற்றொன்று எலிபெண்டா. ஜூஹூ அழகிய கடற்கரையுடையது. கன்னியா குமரியில் போலவே இங்கேயும் சூரியன் மறையும் காட்சி கண்டு மகிழத்தக்கது. காந்தியடிகள் பம்பாய்க்கு வந்த நாட்களில் ஜூஹூவில் தான் தங்குவது வழக்கம். ஜூஹூவில் ஒரு விமான நிலையமும் இருக்கிறது.

பம்பாயிலிருந்து ஆறு கல் தொலைவில் காராபுரி என்ற சிறு தீவு உள்ளது. இந்தத் தீவிற்கு கேட்வே ஆப் இந்தியாவிலிருந்து மோட்டார் படகுகளில் செல்லலாம். அங்கே பெரிய வடிவத்தில் கல்லில் செதுக்கப் பட்ட விலங்குகள் இருப்பதால் எலிபெண்டா என்னும் பெயர் அதற்கு அண்மையில் ஏற்பட்டிருக்கிறது. எலிபெண்டாவில் குகை வடிவில் பிரம்ம, விஷ்ணு சிவன் கோவில்களும் பிற கட்டிடங்களும் உள்ளன. இக் குகைகளின் சிற்பச் சிறப்புக்கு இணை வேறெங்கும்

இல்லை எனலாம். இந்தச் சிற்பங்கள் ஏற்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்றும். இவற்றைக் காணும் போது மாமல்லபுரத்துச் சிற்பங்கள் நம் நினைவுக்கு வருகின்றன. இந்தக் குகைகளைக் கண்டதும் நாமக்கல் கவிஞர் பாடிய பின்வரும் பாடல் ஈண்டுக் குறிப்பிடத் தகுந்தது.

*"ஆனையுருக் கருங்கல்லில் கண்டாரன்றி,*
*அயலறியா அன்னியர்கள் யாரோமுன்னால்*
*ஏனையொரு பெயர்தெரிய இயலாமல் போய்*
*எலிவெண்டாக் குகையென்று இசைத்தார் போலும்!*
*போனபெயர்க் குகைகளை நான் பார்த்தபோது,*
*போன என்றன் தமிழ்நாட்டின் புகழ்களெல்லாம்*
*மானமிக என்மனத்தே வந்துகுத்த,*
*மருண்டவன்போல் இருண்டகுகை மயங்கி நின்றேன்."*

★

ARCHIVES LIBRARY
108121

# 3. புதுச்சேரி

புதுச்சேரியில் இறக்குமதி வியாபாரம் செய்யும் நண்பர் ஒருவரின் இடைவிடாத வேண்டுகோளுக்கிணங்க யான் 1951 ஜனவரி மாதத்தில் அந்நகருக்குச் சென்றேன். புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னரே முயன்றும் ஏனைய ஊர்களுக்குக் கிடைப்பதைவிடப் புதுச்சேரிக்கு ரயிலில் மேல்வகுப்பு இடவசதி கிடைப்பது கடினமாகவே இருந்தது. ஒருவாறாக "டிக்கட்" பெற்று, இரவு 9-40-க்குச் சென்னையிலிருந்து புறப்படும் திருவனந்தபுரம் பாசஞ்சர் ரயிலில் நேரே புதுச்சேரிக்குச் செல்லும் வண்டியில் ஏறிக்கொண்டேன். மறுநாட் காலை ஆறு மணியளவில் சென்னையிலிருந்து தெற்கே 113 மைல் தொலைவிலுள்ள கண்டமங்கலம் என்னும் சின்னபாபு சமுத்திரத்தை ரயில் அடைந்தது. இந்த ஊருடன் இந்தியக் குடியரசின் எல்லை முடிந்து, பிரெஞ்சு இந்தியா தொடங்குகிறது. ஆகையால், நாடு விட்டு நாடு செல்லுவோரைத் தணிக்கை செய்யும் சுங்க அலுவலர் இங்கும் உள்ளனர். இவர்கள் இந்திய அரசியலாரின் ஊழியர்கள். சுங்கச் சோதனை முடிந்து விட்டதாகத் தெரிவித்து இவர்கள் அனுமதி கொடுத்த பின்னரே, இங்கிருந்து ரயில் புறப்பட வேண்டும். சுங்கச் சோதனைக்கெனத் தகரக் கூடாரம் ஒன்று அமைக்கப்

பட்டிருக்கிறது. மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் தம் பொருள்களை இந்த இடத்திற்குத் தாமே எடுத்துச் செல்ல வேண்டும். ஏனைய வகுப்புப் பிரயாணிகளைச் சுங்க அலுவலரே ரயிலுக்கு வந்து சோதித்து விட்டுச் செல்லுவர். இக்காரணத்தாலேயே புதுச்சேரிக்கு மேல் வகுப்பில் பிரயாணம் செய்யப் பலர் முயலுகின்றனர்.

கண்டமங்கலததில் ரயில் நின்று கொண்டிருந்த போது, இந்திய அரசியலாரின் சுங்கச் சோதனையைப் பற்றி உடன் வந்த பிரயாணிகள் மனம் புழுங்கிப் பேசினர். பிரெஞ்சு இந்திய அரசியலார் எவ்விதச் சோதனையும் செய்யவில்லை என்பதையும் அவர்கள் எனக்கு எடுத்துக் கூறினர். கண்டமங்கலத்திலுள்ள அலுவலர் மிகவும் கண்டிப்பானவர் என்றனர்; எனது "டைப்ரைட்டரை" எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதி தர மாட்டார்கள் என்றுங் கூறினர். இந்தியாவிலுள்ள மூலப் பொருள்கள் கள்ளத்தனமாகப் புதுச்சேரி வழியாகப் பாக்கிஸ்தானுக்குச் செல்வதைத் தடுக்க இந்த எல்லையில் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்றுநான் தெரிவித்தேன். கண்டமங்கலத்திலுள்ள சுங்க அலுவலர் விரிந்த மனப்பான்மையுடன் நடந்துகொள்வது இயலாதென்பதையும், ஏனெனில் கடல் சுங்க அலுவலருக்குள்ள மிகுதியான உரிமைகளும் அதிகாரங்களும் நிலச் சுங்க அலுவலருக்கே இல்லை யென்பதையும், இவர்கள் "எக்சைஸ்" இலாகாவுக்குட்பட்டவர்கள் என்பதையும் நண்பர்களுக்கு எடுத்துக் கூறினேன். சுங்க அலுவலர் எங்கள் இருக்கைக்கு வந்தார். எல்லோரையும் சோதித்தவுடன் எனது "டைப்ரைட்டர்"

கருவியுடன் என்னைத் தம் மேலதிகாரியிடம் அழைத்துச் சென்றார். யான் ஓர் எழுத்தாளர் என்பதைத் தெரிவித்ததும், அக் கருவியின் எண் இன்னதென்பதையும் யான் அதை இந்திய யூனியனிலிருந்து எடுத்துச் செல்லுகிறேன் என்பதையும் எனது பாஸ்போர்ட்டில் எழுதியபின் அவர் எனக்கு உரிய அனுமதி தந்தார்.

**புதுச்சேரி அடைதல்**

மேலும் 10 மைல் பிரயாணம் செய்து, காலை 7-15 மணிக்குப் புதுச்சேரியை அடைந்தேன். ரயில் நிலையத்திலிருந்து ரூ டி ரெங்கப்பிள்ளையிலுள்ள நண்பரின் வீட்டிற்கு ரிக்ஷா ஒன்றில் சென்றேன். ரூ டி ரெங்கப் பிள்ளை என்பதற்கு ரேங்கப் பிள்ளை தெரு என்பது பொருள். "ரூ டி" என்ற அடைமொழியைப் பெயருக்கு முன்னால் சேர்ப்பது பிரெஞ்சு வழக்கம். இவ்வாறு சாலைகளுக்குப் பெயரிடுவதைப் பாரிசில் பார்த்திருக்கிறேன். ஆனால் புதுச்சேரியில் ரூ என்ற அடைமொழியை மட்டும் சேர்த்துக் கொள்ளுகின்றனர், தமிழையும் ஆங்கிலத்தையும் கொலை செய்யும் புதுச்சேரி வாசிகள், பிரெஞ்சு மொழிக்கும் இவ்வாறே மரியாதை செய்கின்றனர்.

ரயில் நிலையத்திலிருந்து ரூ மகாத்மா காந்தி வழியாகச் சென்றேன். இது முன்னர் மதராஸ் ரோடாக இருந்ததாம். பிரெஞ்சுப் பாராளுமன்றம் இசைவு தெரிவித்த பின்னரே இதன் பெயர் மாற்றப்பட்டதாம். சென்னையில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்பதற்கு சைனா பஜார் என்னும் பழைய பெயரையே சிலர் பயன்படுத்தி வருவதுபோல, புதுச்சேரி

யிலும் சிலர் இன்னும் பழமையையே கடைப்பிடிக்கின்றனர். ஸ்ரீ மகாத்மா காந்தி தென் வடலில் 10 பர்லாங்கு நீளமுள்ள ஒரு பெரிய சாலை. புதுச்சேரியின் புகழ் பெற்ற கடைகள் இச்சாலையிலும் டூப்ளே தெருவிலும் உள்ளன.

நண்பரின் வீடு உள்ள சாலையின் பெயரில் ரெங்கப் பிள்ளை என்பது வரலாற்றில் புகழ்பெற்ற ஆனந்த ரெங்கப் பிள்ளையைக் குறிப்பதாகும். மலாய் நாட்டினரைப் போலவே எதையும் சுருக்கமாகக் கூறும் புதுச்சேரி மக்கள் ஆனந்த என்னும் சொல்லைக் கைவிட்டனர். தம் ஊர்ப் பெயரையும் புதுவை என்று தமிழிலும், "பாண்டி" என்று ஆங்கிலத்திலும் சுருக்கிக் கூறுகின்றனர். புதுக்கோட்டைக்காரர்களும் தம் நகரை, "புதுவை" எனக் குறிப்பிட்டு வருவதால் புதுச்சேரிக்காரர்கள் தம் நகரின் முழுப் பெயரைக் குறிப்பிடுவதே நன்று என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனந்த ரெங்கப் பிள்ளை 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். பிரெஞ்சு இந்தியக் கவர்னராக இருந்த டூப்ளே துரையின் துபாஷாக இருந்தவர். "துபாஷ்" என்பது துவிபாஷி என்னும் வடசொல்லின் திரிபாகும். இது இருமொழி அறிந்தவர்களைக் குறிக்கும். ஆனந்த ரெங்கப் பிள்ளை பிரிட்டிஷாருக்கு எதிராகப் பிரெஞ்சுக்காரருக்குத் துணை செய்தவர். பிரெஞ்சுப் பாதிரிமார் இடித்த இந்துக் கோயில்களை மீண்டும் கட்டி, அரிய மதப்பணியாற்றியவர். ஆனந்த ரெங்கப் பிள்ளை புதுச்சேரியில் வாணிபத்தால் வளம் பெற்றவர். மதி நலத்தால் அவர் மன்னரும் மதிக்க

வாழ்ந்தவர் நாள்தோறும் நாட்டிலே தாம் கண்ட காட்சிகளையும் கேட்ட செய்திகளையும் ஒழுங்காகக் குறித்து வைத்திருந்தார். இக் குறிப்புக்கள் ஏழு பெரிய நூல்களாக வெளிவந்து இப்பொழுது வரலாற்றுக் களஞ்சியமாகப் பயன்படுகின்றன. இந்த நூல் சிறு கதைக் கொத்து அல்ல: சரித்திர நூலும் அல்ல. அன்ருடம் பார்த்ததையும் கேட்டதையும் குறைக்காமலும் மிகைப்படுத்தாமலும் கற்பனு சக்தியை உபயோகப்படுத்தாமல் உள்ளதை உள்ளபடி அவர் அதில் குறிப்பிட்டிருக்கிருர். அவர் காலத்தில் தமிழ் நாடு எவ்வாறு இருந்தது என்பதைச் சினிமாப் படத்தில் பார்ப்பதைப் போன்ற உணர்ச்சி இந் நூலால் ஏற்படும். 250 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நடை எப்படி இருந்தது என்பதை அறியவும் இந்த நூல் பயன் படுகிறது.

### நகரமைப்பு

புதுச்சேரியில் என் கருத்தை முதலில் கவர்ந்தது அந் நகரின் அமைப்பாகும். "பெரிய சதுரத்தில் குறுக்கும் நெடுக்கும் நேர்கோடுகள் கிழித்தாற்போல, தாயம் ஆடும் சதுரக் கோடுகள்போல், அந்த நகரத்தின் அழகான தெருக்கள் நேர்நேராக விளங்கின" என்று புதுச்சேரி நகரமைப்பின் சிறப்பை "யான் கண்ட இலங்கை" என்னும் நூலில் அறிஞர் மு. வரதராசஞர் அவர்கள் வியப்போடு வருணித்துள்ளார். இத்தகைய நகரங்களை இன்று சென்னை அடையாற்றிலுள்ள காந்தி நகரிலும் வேறு பல இடங்களிலும் காண்கிருேம். ஆனல் புதுச்சேரி அளவுள்ள ஒரு பெரியநகரம்—அதன் ஜனத்தொகை ஒரு லட்சம்—200 ஆண்டுகளுக்கு முன்

இவ்வாறு அமைக்கப்பட்டது போற்றத் தகுந்தது அன்றோ? பிரெஞ்சு இந்தியாவுக்கெனப் புதிய தலை நகர் ஒன்றை அமைப்பதற்காகப் புதிய ஒரு சேரியின் அருகே இந்த ஊர் நிர்மாணிக்கப்பட்டதாம். புதுச் சேரியிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஒழு கரை என்னுஞ் சிற்றூரே பிரெஞ்சு இந்தியாவின் தலைநகராக முன்னர் இருந்ததாம். ஒழுகரை என்பது "உழவர் கரை" என்பதன் திரிபு. இந்தக் கிராமம் ஒரு காலத்தில் வளமாக இருந்ததை "உழவர் கரை வேளாளருக்கு மிதியடி பொன்னாலே" என்னும் வாக்கால் அறியலாம்.

வெஸ்டு எண்டு, ஈஸ்ட் எண்டு என்ற இரு பகுதிகள் லண்டனில் இருப்பதையும், ஒன்றில் செல்வரும் மற்றொன்றில் ஏழைகளும் வாழ்வதையும், வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள லண்ட னுக்குச் சென்ற காந்தியடிகள் பின்னதிலேயே தங்கி யதையும் அன்பர்கள் அறிந்திருக்கக்கூடும். நியூயார்க் நகரிலும் ஈஸ்ட் சைட், வெஸ்ட் சைட் என்ற பாகுபாடு களும் டவுன் டவுன், அப் டவுன் என்ற பாகுபாடுகளும் உள்ளன. இவை செல்வம் பற்றிய வேறுபாடுகள் அல்ல. இலங்கையில் திருக்கோண மலையில் வெள்ளையர் வாழும் கடற்படைத் தளமும், இலங்கையர் வாழும் ஏனைய பகுதிகளும் உள்ளன. இவை அமைப்பிலும் வசதிகளிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. இவற்றைப் போலவே புதுச்சேரியிலும் இரு பகுதிகள் உள்ளன, ஒன்று வெள்ளையரும் அவர் வழியைப் பின் பற்றிச் செல்வோரும் வாழும் பகுதி. மற்றொன்று பாமர மக்கள் வாழும் பகுதி.

நகரை இவ்வாறு இரு கூருகப் பிரிப்பது பக்கிங் ஹாம் கால்வாய் ஆகும். சென்னையிலுள்ளவர்களுக்கு இதன் சிறப்பு நன்ருகத் தெரியும். அரிசியும், விறகும், வைக்கோலும் சென்னை நகருக்கு வர உதவும் இந்தக் கால்வாயை அவர்கள் எப்படி மறக்க முடியும்? நாகப் பட்டினம்வரை செல்லும் இக் கால்வாயைப் பிரெஞ்சு இந்தியாவுக்குப் பயனற்றதாகப் பிரிட்டிஷார் செய்து விட்டனராம். பிரெஞ்சிந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடை செய்ய இம்முயற்சி செய்யப் பட்டதாம். புதுச்சேரியில் இக் கால்வாய் தூர்ந்து விட்டது எனலாம். அதன் ஓரங்களில் மட்டுமன்றி இடைப் பகுதியிலும் "சிமெண்டு" பூசப்பட்டுள்ளது. புதுச்சேரி இந்திய யூனியனுடன் ஒன்ருகிவிட்ட பிறகு மீண்டும் படகுகள் செல்லத்தக்கபடி இக்கால்வாய் செப்பனிடப்படும் என்பதில் ஐயமில்லை. ஆறு, கால்வாய் இவற்றின் வாயிலாகப் போக்குவரவை விரிவாக்க இந்தியாவின் பல பகுதிகளில் நமது அரசியலார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பக்கிங்ஹாம் கால்வாய் மாமல்லபுரம் வழியாகச் செல்லுகிறது; இவ்வழியே, சென்னையிலிருந்து புதுச்சேரி 70 மைல் தொலைவில்தான் இருக்கிறது.

### வெள்ளையர் நகரம்

வெள்ளையர் வாழும் பகுதி மேற்கூறிய கால் வாய்க்கும் கடற்கரைக்கும் இடையே உள்ளது. இங்கே பிரெஞ்சு இந்தியக் கவர்னரின் கட்டிடமும், சட்டசபை கூடுமிடமும், அமைச்சுக் குழுவின் அலுவலகமும், பேங் டி இந்தோ-சைஞ என்ற பேங்கும், இறுதி நீதி மன்றமும் ஆசிரமத்தைச் சேர்ந்த கட்டிடங்களும்

உள்ளன. கடட்ரே என்னும் ரிக்கார்டு ஆபீசும், ஹைறபோதிகேசன் பீரோ என்னும் வரி வசூல் ஆபீசும், ரவிதாய்மோ பீரோ என்னும் சிவில் சப்ளைஸ் இலாகாவும், இந்தியக் கான்சல் ஜெனரலின் அலுவலகமும், சேம்பர் ஆப் காமர்சும், ஐரோப்பிய ஹோட்டல்களும், கண்ணடி பங்களாவும் இன்னும் பல அலுவலகங்களும் கீழ்த்தர மான ஓர் ஆஸ்பத்திரியும் வெள்ளையர் வாழும் பகுதியி லுள்ளன.

இந்தியக் கான்சல்

புதுச்சேரியில் 1852 முதல் இந்தியக் கான்சல் ஒருவர் இருந்து வருகிறார். வணிக உறவுகளைக் கவனிப் பதே இவருடைய முக்கிய வேலையாக இருந்து வந்தது. பிரிட்டிஷாருடைய நலன்களைக் காப்பதற்காகவே பிரிட்டிஷ் இந்திய அரசியலார் இந்த அலுவலகத்தை அமைத்ததால், பிரிட்டிஷாரே இப் பதவிக்கு நியமிக்கப் பட்டனர். 1947-இல் நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், இங்கே முதல் முறையாக இந்தியர் ஒருவர் கான்சலாக நியமிக்கப்பட்டார். அரசியல் அதிகாரங்கள் சிலவும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. கான்சல் ஜெனரல் என்ற சிறப்புப் பெயரும் அப் பதவிக்கு வழங்கப்பட்டது. புதுச்சேரியிலுள்ள இந்தியக் கான்சல் ஜெனரல் இப்போது இந்தியாவின் நலனையே காப் பாற்றி வருகிறார். பிரெஞ்சு இந்தியாவின் பிறபகுதிக ளான காரைக்கால், மாஹி, ஏனம் ஆகியவற்றிலும் இந்தியாவின் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பு இவரைச் சேர்ந்தது. இப்போதுள்ள இந்தியக் கான்சல் ஜெனரல் மிஸ்டர் டான்டன் என்பவர் ஆவார். இவர் லாகூரில் நாட்டுப் பிரிவினைக்கு முன் வாழ்ந்தவர்; இலங்கையி

லுள்ள இந்திய ஹை கமிஷனரின் காரியதரிசியாக இருந்தவர்; பிரெஞ்சு மொழி அறிந்தவர்; நல்ல மூகக் களையும் நிறைந்த அனுபவமும் உடைய இவரை யான் சந்தித்து உரையாடினேன். தாம் தமிழ் கற்க முயன்று வருவதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

இந்தியக் கான்சல் ஜெனரல்மீது புதுச்சேரியில் அனைவருமே பொறாமைப் படுகிறார்கள் எனலாம். ஏனெனில், புதுச்சேரியில் உள்ளூருக்குள் பேசிக் கொள்ளும் டெலிபோன் வசதி மட்டுமே உண்டு. வெளி யூருக்குப் பேச உதவும் டிரங் டெலிபோன் இந்தியக் கான்சல் ஜெனரல் ஒருவருக்கே உண்டு. பிரெஞ்சு இந்தியக் கவர்னருக்குக்கூட இத்தகைய வசதி இல்லை. இவருக்கோ அன்றிப் புதுச்சேரியிலுள்ள மற்றவர் களுக்கோ, பிரெஞ்சிந்தியா இந்திய யூனியனுடன் ஐக்கியமாகும் வரையில் இத்தகைய வாய்ப்பு ஏற்படப் போவதில்லை.

**போக்குவரவுப் பொறிகள்**

பிரெஞ்சு இந்தியாவுக்குள் செல்லும் ரயிலும் இந்திய அரசியலாரைச் சேர்ந்ததே. பிரெஞ்சு இந்தியாவி லுள்ள அஞ்சல் நிலையங்களும் இந்தியத் தபால் இலாகா வுக் குட்பட்டவையே. பிரெஞ்சு ஆட்சியில் இவ்வாறு தொழில் நடத்தும் உரிமை தந்திருப்பதற்காக, இந்தியத் தபால் இலாகாவினர் தமது வருவாய்க்கு ஏற்றபடி ஓர் ஈவுத் தொகையைப் பிரெஞ்சு இந்திய அரசியலார்க்குச் செலுத்துகின்றனர். இவ்வாறு சென்ற ஆண்டில் நமது தபால் இலாகாவினர் செலுத்திய தொகை ரூ. 60,000 இருக்கலாம் என அறிந்தேன். இந்தியத் தபால் ஆபீஸ் தவிர பிரெஞ்சுத் தபால் ஆபீஸ் ஒன்றும் புதுச்சேரியில்

இருக்கிறது. இதன் வாயிலாகப் பிரான்சுக்கும் பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்கும் தபால் அனுப்பலாம். இவை சில சமயங்களில் இந்தியத் தபால் இலாகா வாயிலாகவே அனுப்பப்படுகின்றன. மற்றொரு வேடிக்கை என்ன எனின், புதுச்சேரியிலிருந்து காரைக்காலுக்கு இந்தியத் தபால் ஆபீஸ் வாயிலாக அனுப்பும் கார்டுக்கு 9 பைசாவும், பிரெஞ்சு இந்தியத் தபால் ஆபீஸ் வாயிலாக அனுப்பும் கார்டுக்கு 6 பைசாவும் செலுத்த வேண்டியதிருப்பதாகும்.

மின்சாரத்தின் பெரும் பகுதியும் இந்திய யூனியனிலிருந்துதான் புதுச்சேரிக்குச் செல்லுகிறது. போதிய அளவு மின்சாரம் கிடைக்காததால், புதுச்சேரியில் இருள் சூழ்ந்திருக்கிறது. "கல்யாணமாகியும் பிரம்மசாரி, கடன் வாங்கியும் பட்டினி" என்பதுபோல, மின்சார விளக்கு இருந்தும் இரவில் புதுச்சேரி இருட்டாகவே இருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காகப் புதிய மின்சார நிலையம் ஒன்றை அமைக்கப் பிரஞ்சிந்திய அரசியலார் ஏற்பாடு தொடங்கியுள்ளனர். இவ் வேலை முடிந்தபின் தென்னிந்தியாவில் இதுவே பெரிய மின்சார உற்பத்தி நிலையமாக விளங்கும். இதற்காகவும் புதிய விமான நிலயம் ஒன்றை அமைக்கவும் அமெரிக்க அரசியலார் பொருளுதவி செய்து வருவதாக வதந்திகள் உள்ளன.

**பேங்கு**

இந்தியா அரசியல் விடுதலை அடையுமுன் இந்தியக் கான்சலின் பேங்குக் கணக்கு பேங் டி இந்தோ சைனுவிடம் இருந்து வந்தது. இவ்வாண்டு முதல் இந்தியப்

பேங்கு ஒன்றிலேயே தம் கணக்குகளை வைத்துக் கொள்ளும்படி இந்தியக் கான்சல் ஜெனரலுக்கு நமது அரசியலார் கட்டளையிட்டுள்ளனர். பேங் டி இந்தோ சைனு பற்றி இங்கே சிறிது கூறுவோம். இது பிரெஞ்சுக்காரர் சிலரைச் சேர்ந்த தனிப்பட்ட பேங்கு. இப்போது பிரெஞ்சு அரசியலாரின் பேங்கைவிட இது வலுவாக இருக்கிறது. பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட மற்ற நாடுகளில் இதுவே அரசியலாரின் பேங்காக இருந்து வருகிறது. 1, 5, 50 ரூபாய் மதிப்புள்ள பிரெஞ்சு இந்தியக் கரன்ஸி நோட்டுக்களை அச்சிடும் உரிமை இந்தப் பேங்குக்கு உண்டு. 25 ஆண்டுகளாகப் புதுச்சேரிக் கிளையில் ஆதாயம் இன்றியிருந்தது. அங்குள்ள துறைமுக வாயிலாகப் பெரும் அளவில் வெளிநாட்டு வாணிபம் ஏற்பட்டதால், சென்ற ஆண்டில் மட்டும் இந்தப் பேங்குக்குப் பத்து லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்ததாம். பிரெஞ்சிந்திய நாணயத்தைப் போன்றே இந்திய யூனியன் நாணயமும் புதுச்சேரியில் செலாவணியாக இருந்து வருகிறது. ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. பிரெஞ்சு இந்திய நோட்டை ஆயிரம் சுக்குகளாகக் கூடக் கிழித்துக் கொடுக்கலாம். பேங் டி இந்தோ சைனுக்காரர் அதை வாங்கி வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாகப் புது நோட்டை அச்சிட்டு வெளியிடுவர். இந்திய ஒரு ரூபாய் நோட்டைப் பொறுத்தவரையில் கிழிந்த நோட்டுக்களைப் புதுச்சேரியில் செல்லவைப்பது எளிதன்று. இம்பீரியல் பேங்கின் கிளை அங்கே இல்லாததால், வெளியூருக்கு அனுப்ப மனமில்லாமல், இந்தியப் பேங்குகளிலுள்ள அலுவலர் நமது ஒரு ரூபாய் நோட்டை மேலும் கீழும் பார்க்கிறார்களாம்.

வாணிபம்

தொழில் துறையில் புதுச்சேரி சிறப்பாக விளங்கு கிறது. இந் நகரிலுள்ள மூன்று பஞ்சாலைகளிலும் சேர்ந்து 86,000 கதிர்கள் உள்ளன. இங்கேயுள்ள ரோடியோ மில் இந்தியாவிலேயே சிறந்த நெசவு ஆலைகளுள் ஒன்றாகும். இந்த ஆலைகளில் உற்பத்தி யாகும் பொருள்கள் பிரெஞ்சு ஆட்சியிலுள்ள வட ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப் பொருள்களுக்கு அங்கேயும் மடகாஸ்கரிலும் இந்தோ சைனாவிலும் நல்ல "மார்க்கட்" இருக்கிறது. ஆண்டுதோறும் மூன்று கோடி ரூபாய் விலையுள்ள துணியைப் பிரெஞ்சு இந்தியா இந்த நாடுகளுக்கு விற்பனை செய்கிறது. இந்திய மக்களுக்குப் பயன்படும் துணிகளை இந்த ஆலைகள் மிகுதியாக உற்பத்தி செய்வ தில்லை. இங்கிருந்து கழிவுப் பஞ்சு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகிறது. இந்த ஆலைகளுக்கு வேண்டும் பஞ்சு (Raw Cotton) பாக்கிஸ்தானிலிருந்து வருகிறது. பாக்கிஸ்தானிலுள்ள தம் பணத்தைச் செலுத்திப் பஞ்சு வாங்கிப் புதுச்சேரியிலுள்ள மில்களுக்கு விற்று முடங்கிப்போன மூலதனத்தை மீண்டும் இந்திய நாணய மாகப் பெற்று விடுவோரும் புதுச்சேரியில் உள்ளனர். (இக் கட்டுரை பாக்கிஸ்தான் நாணயத்தின் மதிப்பை இந்திய அரசியலார் ஒப்புக் கொள்வதற்கு முன் எழுதப் பட்டது.) நாணயக் கட்டுப்பாட்டால் துன்பப் படு வோரும் இங்கே இருக்கின்றனர். இவர்களுள் உள்ளூர் கிறிஸ்தவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் வேளாள யாதவ சமூகத்தவர்; உயர் குடும்பத்தினர். இந்தோ சைனா அரசியலாரிடம் வேலை பார்த்து ஓய்வு

பெற்றபின் வாழ்க்கை நடத்த மீண்டும் புதுச்சேரிக்கு வந்து இறுதி நாட்களைக் கழிப்பவர்கள். இந்தக் கிறிஸ் தவப் பெருமக்களில் சில ஆயிரம் பேருளர். இந்தோ சைனுவிலிருந்து பணம் அனுப்புவதிலுள்ள தடைக ளால் இவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். புதுச்சேரியில் கிறிஸ்தவர் மிகுதியா யிருப்பதையும் தென்னிந்தியக் கத்தோலிக்கருக்கு இந் நகரம் தலைமை யிடமாக இருப்பதையும் இங்கே குறிப்பிடலாம். இங்கே கிறிஸ்தவர், கிறிஸ்தவரல்லாதார் என்ற வேற்றுமை யுணர்ச்சி நிலவுவதையும் வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியதிருக்கிறது.

**துறைமுகமும் சிலையும்**

புதுச்சேரிக் கடற்கரையில் கலங்கரை விளக்கு ஒன் றுளது. அதனருகே ஒரு பர்லாங்கு நீளமுள்ள இரும்புப் பாலம் ஒன்று கடல்மேல் செல்லுகிறது. இது தனுசு கோடியிலுள்ள பீயர் போன்றது. ஆனல் புதுச்சேரிப் பாலம் புதுப்பிக்க வேண்டிய நிலையிலுள்ளது. இந்தப் பாலமே புதுச்சேரியின் துறைமுகமாக விளங்குகிறது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியார் இக் கடற்கரையில் தான் காலை வேளையில் உலவுவார்; கடலின் எழிலைக் கண்டு மகிழ்வார்; சூரியோதயத்தைக் கண்டு தம் துன்பத்தை மறந்து.

“காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடல்ஓர் தெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாம் ஜோதி பொருந்தி முறைதவறு
வேகத் திரைகளினல் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னும் திருநகரில்”

என்று அவர் பாடியதும் இங்கேதான். பாரதியார், வ. வே. சு. ஐயர் போன்ற பல தேசீயத் தலைவர்கள் அரசியல் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்தபோது, புதுச்சேரியில்தான் தஞ்சம் அடைந்தனர். ஆகவே புதுச்சேரிக்கு இந்திய அரசியல் வரலாற்றில் சிறப்பான இடம் உண்டு. பாரதியாரின் சீடரான புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வாழ்வதும் இந் நகரில்தான். இந் நகரிலுள்ள புதுவைக் கல்விக் கழகம் பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பணியாற்றி வருகிறது.

துறைமுகத்தின் எதிரே சித்திர வேலைப்பாடுகளுள்ள பல தூண்கள், மதுரையில் உள்ள பத்துத் தூண்கள்போல, ஒன்றுக்கொன்று தொடர்பின்றி இருக்கின்றன. இந்த இடத்திற்கு அருகிலேயே இவைகளைப் போன்ற மேலும் சில தூண்கள் வட்டமாக ஊன்றப்பட்டு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது நிறுத்தப்பட்டுள்ள டூப்ளேயின் சிலை எழில் மிக்க காட்சியைத் தருகிறது. துறைமுகப் பாலத்தையும் டூப்ளே சிலையையும் இங்கே படம் பிடித்துக் காட்டியுள்ளோம். டூப்ளே ஒரு பிரெஞ்சுக்காரர்; கவர்னராக இருந்தவர். ஆங்கிலேயரை அலற வைத்ததால் வரலாற்றில் புகழ்பெற்றவர். இவர் சிலையைத் தாங்கும் தூண்கள் தமிழ்க் கலையின் சிறப்பை உணர்த்துகின்றன. இவை புதுச்சேரிக்கு மேற்கே 60 மைல் தொலைவில் செஞ்சியில் தேசிங்கு ராஜா கோட்டையில் இருந்தன. அப் பகுதி 1550 முதல் 1661 வரை பிரெஞ்சு ஆட்சியிலிருந்தபோது ஏனைய கலைச் செல்வங்கள் பிரான்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

டூப்ளேயின் சிலையை அடுத்து, இரங்கூனிலுள்ள ராணி தோட்டம் போன்ற ஒரு பூந்தோட்டம் இருக்கிறது. இதன் நடுவே வட்ட வடிவமான சிறு கட்டிடம் ஒன்றுளது. இதைப் படத்தில் காணலாம். பூங்காவுக்கு வடக்கே கவர்னரின் வீடு இருக்கிறது. டூப்ளேயின் சிலைக்கு அண்மையில் போர்ச் சின்னம் ஒன்று கடற்கரையில் இருக்கிறது. அதன் பின்புறத்தில் 15-1-1742-இல் டூப்ளே பிரான்சிலிருந்து வந்து சேர்ந்ததைச் சித்திரிக்கும் ஓவியம் ஒன்று வரையப் பெற்றுள்ளது.

ஐரோப்பியர் வாழும் பகுதியிலுள்ள வெள்ளைக்காரன் பிள்ளையார் கோயிலைப் பற்றிச் சிறிது கூறுவோம். இவ் ஆலயத்தின் அசல் பெயர் மணக்குள விநாயகர் கோயில் என்பதாகும். இக் கோயிலுக்கு அடுத்த கட்டிடத்தில் மொம்பாசான் என்ற பிரெஞ்சுக் குடும்பத்தினர் வாழ்ந்தனர் என்றும், இந்த விநாயகரை அவர்கள் பலதடவை கடலுள் எறிந்தும்கூட விநாயகர் மீண்டும் மீண்டும் தன் இருக்கையை அடைந்ததாகவும், பலவாறாகத் துன்பப்பட்ட அந்த வெள்ளையர் தாம் செய்த தவறை உணர்ந்து இக் கோயிலுக்கு இடம் தந்து பொருளுதவியும் தாமே செய்தனரென்றும் புதுச்சேரியில் வரலாறு வழங்குகிறது. இன்றுங்கூட அந்தச் சாலை வழியே செல்லும் வெள்ளையர் கோயில் வாயிலில் சில விநாடிகள் நின்று தலை வணங்குகின்றனர்.

**ஆசிரமம்**

மேற்கூறிய கோயிலுக்கு அருகில் அரவிந்த ஆசிரமத்தின் முக்கியமான கட்டிடம் இருக்கிறது. இதைப்

பற்றி எழுதுவதற்குமுன், ஆசிரமம் தோன்றிய வரலாறு முதலியவற்றைக் கூறுவோம்.

1910-இல் அரவிந்தர் புதுச்சேரியில் குடியேறினர். அவருடைய அரசியல் தோழர்கள் நால்வரும் அவருடன் வாழ்ந்தனர். ஆத்மீக ஆராய்ச்சியில் ஈடுபடவோ ஆசிரமம் ஒன்றை அமைக்கவோ அவர் அப்போது எண்ணவில்லை. உடன் வாழும் தோழர்களின் தொகை சில ஆண்டுகளில் 25-ஆகப் பெருகிற்று. வாழ்க்கையை உயரிய நிலையில் நடத்த அவர்களுக்கு அரவிந்தர் வழி காட்டினர். ஆத்மீகத் துறையில் ஈடுபட்ட பிரெஞ்சு அம்மையார் ஒருவர் 1920—இல் இவர்களை அறிந்தார். அவருடைய யோசனைக்கிணங்க, ஏற்கனவே தனித்தனியே வாழ்ந்த நண்பர்கள் 1925-இல் இயக்க ரீதியாக ஒரே குடும்பமாக ஓரிடத்திலேயே கட்டுப்பாடாக வாழத் தொடங்கினர். ஓராண்டுக்குள் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. பொது வாழ்விலிருந்து அரவிந்தர் விலகினர். மௌன விரதத்தை அவர் மேற்கொண்டார். தம் சீடர்களை அம்மையாரின் கட்டுப்பாட்டுக்குட்படுத்தினர். அம்மையார் ஆசிரமத்தின் தலைவரானர். ஆசிரமத்திலுள்ள அனைவருக்கும் தாயாக அம்மையார் விளங்கினர். தாய் (Mother) என்னும் சிறப்புப் பெயராலேயே இன்றளவும் அம்மையார் அழைக்கப்படுகிருர்.

ஆசிரமம் என்ருல் துறவிகள் கூடி வாழும் ஒரு மடம் என்றும், இந்த ஆசிரமமும் இவ்வாறிருக்கலாம் என்றும் நினைப்பது இயற்கையே, ஆனல் புதுச்சேரி ஆசிரமம் ஓர் ஆசிரியரைச் சுற்றி அவருடைய அறிவுரைகளைப் பின்பற்றுவோர் வாழும் இடம் என்ற அளவி

லேயே ஒரு ஆசிரமமாகும். இந்த ஆசிரமத்திற்குக் குறிப்பிட்ட சட்ட திட்டங்கள் கிடையா. தாய் விடுக்கும் கட்டளைகள் முடிவானவை. இதன் விளைவாக இங்கே சர்வாதிகாரம் நிகழ்வது வெள்ளிடைமலை. ஆசிரமம் எல்லா நாட்டினருக்கும் மதத்தினருக்கும் மொழியினருக்கும் எத் தொழில் உள்ளவர்களுக்கும் பொதுவானது. ஆனால் குறிப்பிட்ட யாரை ஆசிரம உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது பற்றித் தாய் செய்யும் தீர்மானம் இறுதியானது. வெள்ளையர் 15 பேரும், பல இந்திய இராச்சிய வாசிகளும், மிகுதியான வங்காளிகளும் இங்கே உள்ளனர்.

அரவிந்தர் ஒரு பெரிய மகான் என்பதும் அவருடைய அறிவுரைகள் உலகத்தாரால் பாராட்டப் பெற்றிருப்பதும் இந்தியாவுக்குப் பெருமையாகும். அவருடைய கொள்கைகளைப் பரப்பப் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. அவருடைய அறிவுரைகள் சிலவற்றை ஈண்டுத் தருவோம்:

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது. ஆத்மீக சக்தியாலேயே அவரை உணரலாம்.

தவம் இருப்பது நற்பயன் தரும். தவத்தின் சிறந்த பகுதி மன அமைதியே.

கடவுள் பல அம்சங்கள் படைத்தவர். ஒவ்வொரு மதமும் சில அம்சங்களை மட்டுமே பின்பற்றுகிறது.

விருப்பு, வெறுப்பு, பொறுமை, பெருமை, ஆசை, சோம்பல், பயம், ஐயப்பாடு, விரோதம் இவை இல்லா

விட்டால் கடவுள் நம்பிக்கை இல்லாதவருங்கூட, தவம் செய்து கடவுளை உணரலாம்.

பேசாதே, செய். முடிவைத் தெரிவிக்காதே. அதன் விளைவுகளை உணர்ந்துகொள்.

* * *

அரவிந்தரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உலகப் பல்கலைக் கழகம் ஒன்றைப் புதுச்சேரியில் அமைக்க இப்போது முயற்சி நடைபெற்று வருகிறது.

இனி ஆசிரமத்தின் அன்றாட வாழ்வைக் கவனிப்போம். காலை 7 மணிக்கு பன் ரொட்டியும் வாழைப் பழமும் ஒரு கோப்பைக் கொக்கோவும் சிற்றுண்டியாகக் கொடுக்கப்படுகின்றன. 11-15–க்குச் சோறு, மரக்கறி, தயிர், பன் ரொட்டி, வெண்ணெய் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. குழம்பும், ரசமும் இவர்கள் உட்கொள்ளுவதில்லை. மாலை 7 மணிக்கு பன்ரொட்டி, காய்கறி, பால் ஆகியவற்றை அருந்துகின்றனர். இரவு உணவில் இவர்கள் அரிசிச் சோறு உண்பதில்லை. மிளகாய், வெங்காயம், ஊறுகாய் ஆகியவற்றை ஆசிரம உணவு விடுதியில் ஒருவரும் பயன்படுத்தக்கூடாது. இயந்திர உதவியோடு இங்கே சமையல் வேலை நிகழ்கிறது. எல்லோரும் கரண்டி (ஸ்பூன்)யைப் பயன்படுத்தி உண்ண வேண்டுமென்ற அறிவிப்பையும் அங்கே கண்டேன். பாத்திரங்கள் முதலில் தண்ணீரிலும், பின்னர் சவுக்காரம் கலந்த நீரிலும், மீண்டும் தண்ணீரிலும் கழுவப்படுகின்றன. வாழைப்பழத் தோல்வீணாகாமல், பசுக்களுக்கு ஊட்டப்படுகிறது. குப்பைக் காகிதங்களும் வீணாகாமல், காகித

உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய நல்ல பண்பாடுகளை மாணவர் உணவு விடுதிகள் பின் பற்றலாம்.

பன்ரொட்டிகளைத் தயாரிக்கும் பேக்கரியிலும் சலவைத் தொழிற்சாலையிலும், அச்சகத்திலும் பிற தொழிற்சாலைகளிலும் ஆசிரம உறுப்பினர் பணி செய்கின்றனர். இவை யாவும் ஆசிரமத்தைச் சேர்ந்தவை.

மாலை நேரத்தில் ஆசிரமவாசிகள் - இருபாலாரும் - இராணுவத்தார் அணிவது போன்ற உடைகளுடன் உடற் பயிற்சி செய்கின்றனர். ஆசிரமத்திற்கு வரும் முக்கிய விருந்தினர் தங்குவதற்கெனப் பெரிய மாளிகை ஒன்றுளது. ஆசிரமத்திற்கு 150 கட்டிடங்களுள்ளன. இவைகளுள் அழகான கோல்கண்டா என்பது சிறந்த பிரெஞ்சுச் சிற்பி ஒருவரின் திட்டப்படி, சன்னல்கள் இன்றியே அமைக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் கண்ணாடிகளும் பயன்படுத்தப்படவில்லை. எல்லாக் கட்டிடங்களிலும் ஆசிரமத்தார் வெளிப்புறச் சுவர்களில் ஆசிரமக் கட்டிடம் என்பதற்கு அடையாளமாகச் சாம்பல் நிறம் பூசியுள்ளனர்.

ஆசிரம அலுவலகத்தில் மரங்கள் சூழ்ந்துள்ள ஒரு நல்லிடத்தில் முதல் வாயிலுக்கு வலதுபுறத்தில் சிறிது தொலைவில் திறந்த வெளியில் அரவிந்தரின் சமாதி கட்டப்பட்டிருக்கிறது. 5-12-50-இல் அரவிந்தர் சமாதி அடைந்ததை யாவரும் அறிவர். இந்த மரத் தடியில்தான் 1926-இல் அவர் தியானம் செய்தாராம். சமாதியின்மீது பூக்கள் அடிக்கடி பொழியப்படுகின்றன. பலவகைப் பூக்களை ஆசிரமத்தார் தம் நந்தவனங்களில்

பெரிதும் பேணுகின்றனர். சமாதியின்மீது நறுமணந் தரும் பொருள்களும் ஊற்றப்படுகின்றன.

ஆசிரமக் கல்லூரியில் பிரெஞ்சு மொழி சிறப்பாகக் கற்றுத் தரப்படுகிறது. இம் மொழி எகிப்து, இந்தோசைனு, மடகாஸ்கர், சுவிட்சர்லந்து, கனடா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலுள்ள மக்கள் நன்கறிந்த மொழி. பிரெஞ்சு இனிய மொழி. "நாயை விரட்ட ஆங்கிலத்தில் பேசு; மனைவியுடன் கொஞ்சி விளையாடப் பிரெஞ்சில் பேசு" என்றும் ஒருபழமொழி உண்டு. நம்மில் மேலும் பலர் பிரெஞ்சு கற்பது நாட்டுக்கு நன்மையைத் தரும். எனினும், தமிழ்மொழி யறிவின்றியே சிலர் தமிழ் நாட்டில் ஓர் ஆசிரமம் நடத்துவது வருந்தத் தக்கதே. காந்தியடிகள் எளியவாழ்வு வாழ்ந்து பிறருக்காகப் பாடுபட்டதால், அவரை மகாத்மா என்று கொண்டாடினேம். ஆசிரமத்தினர் பிறரைப் பற்றிக் கவலையின்றித் தாம் மட்டும் நல்ல உடை உடுத்தி, நல்ல உணவு அருந்தி, நேரம் தவருது (சிமெண்ட் பூசப்பட்ட) ஒரு மைதானத்தில் கடற்கரை யோரத்தில் டென்னிஸ் விளையாடி, எல்லா வகையான மின்சார அமைப்புகளுமுடைய மாடமாளிகைகளில் வாழ்கின்றனர். இராமகிருஷ்ண மடத்தினர் ஏற்படுத்தியிருப்பதுபோல், இந்த ஆசிரமத்தினர் ஓரிடத்திற்கூட மருத்துவச்சாலையோ அல்லது கல்லூரியோ அமைக்கவில்லை. ஆசிரமத்திலுள்ள மருத்துவச்சாலை, கல்லூரி, நூல் நிலையம் இவைகளில் பொது மக்களை அனுமதிப்பதில்லை. ஆசிரமத்தைச் சேர்ந்த 800 பேருக்கு மட்டுமே இவை பயன் படுகின்றன. ஆசிரமத்திற்கு மிகுதியான நன்செய், புன்செய் நிலங்களுள. இன்று ஆசிரமம் பிரெஞ்சிந்தி

யாவில் வல்லமையுள்ள ஓரியக்கமாக விளங்குகிறது; ரோமாபுரியில் (போப்பாண்டவர் வாழும் பகுதியான) வாடிகனைப்போல ஓர் அரசுக்குள் மற்றோர் அரசாகப் புதுச்சேரியில் ஆசிரமம் இருக்கின்றது என்பது மிகை யாகாது.

**புதுச்சேரியில் மிகுதியாயிருப்பவை**

ஓட்டல்களில் ஈக்கள், எண்ணெய் மில்கள், துர்நாற்றம்.

**புதுச்சேரியில் இல்லாதவை**

உணவுப் பஞ்சம், சுகாதாரம், நீரைத் தானே கழுவித் தரைக்குக் கீழே கொண்டு செல்லும் அமைப்பு, விற்பனை வரி, கட்டாயமாக லைசென்ஸ் பெறும் முறை, சட்டத்திற்கு மதிப்பு, மந்திரிகளுக்குச் சம்பளம்.

★

# 4. யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திற்கும் செட்டிநாட்டிற்கும் மிகுதியான ஒற்றுமை உண்டு. வறண்ட நிலப் பரப்பும் செம்மண்ணும் இரு பகுதிகளிலும் மலிந்துள்ளன. இத்தகைய இடங்களில்தான் சைவமும் தமிழும் வளரும் போலும்! செட்டிநாடு ஒரு பொதுப் பெயராகவும், ஒரு சிறப்புப் பெயராகவும் இருக்கின்றது. செட்டியார்கள் வாழும் பல சிற்றூர்களின் பொதுப் பெயர் செட்டிநாடு; இதே பெயருள்ள ரயில் நிலையத்தையும் விமான நிலையத்தையும் உடைய ஒரு சிற்றூரும் இருக்கிறது. இதைப்போலவே, இலங்கையின் வட பகுதியிலுள்ள தீபகற்பத்திற்கு யாழ்ப்பாணம் என்னும் பொதுப்பெயர் வழங்கி வருகிறது. யாழ்ப்பாணம் என்னும் ஒரு நகரமும் இருக்கிறது. இந்தத் தீபகற்பத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்தார் என்று பெயர். யாழ்ப்பாணத்தார் செட்டியார்களைப் போலவே திரைகடலோடித் திரவியம் தேடுபவர். இலங்கையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் இனத்தவர் இவர் மட்டுமே யாவர். யாழ்ப்பாணத்தார் செட்டியார்களைப் போலவே அடிக்கடி இடியாப்பத்தை உட்கொள்ளுவர்; பெண் குழந்தைகளுக்கு மிகுதியான தொகையைச் சீர்தனமாகக் கொடுப்பர்; அன்றாடச் செலவில்

செட்டாக இருப்பார்கள்; எதையும் பொருள் நோக்கோடு ஆராய்வார்கள்; மத்தியானம் (நடுப்பகல்), வெள்ளனு (உரிய காலத்திற்கு முன்னரே), மெனக்கெட்டு (வலுக் கட்டாயமாக முயன்று) போன்ற சொற்களைப் பயன்படுத்துவார்கள். இரு சமூகத்தாரும் எங்கே பொருளீட்டினுலும் அதைத் தாம் வாழும் இடத்திற்குக் கொண்டுவந்து விடுவர். செட்டி நாட்டிற் போலவே யாழ்ப்பாணத்திலும் வீடு தவருமல் கிணறு உண்டு. பொதுவான இயல்புகள் நிறைந்த இந்த இரு சமூகத்தாரும் வளமான பகுதிகளிலிருந்து வறண்ட பகுதிகளுக்குக் குடியேறியதுதான் வியப்பினும் வியப்பாக இருக்கிறது. காவிரிப் பூம் பட்டினத்திலிருந்து செட்டியார்கள் இராமநாதபுர மாவட்டத்திற்குக் குடியேறியது போல் பொருநை பாயும் தென்பாண்டி நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தார் வட இலங்கைக்குக் குடியேறினர் போலும். இந்தோனேசியாவில் குடியேறிய தமிழர் அங்கே ஒரு மதுரையை ஏற்படுத்தியதுபோல யாழ்ப்பாணத்தாரும் தாம் குடியேறிய பகுதியில் ஒரு திருநெல்வேலியை உண்டாக்கியிருக்கின்றனர்.

ஈழநாட்டில் கொழும்புக்கு அடுத்தபடி பெரு நகரமாக விளங்குவது யாழ்ப்பாணம். இலங்கையின் ஒன்பது இராச்சியங்களுள் ஒன்ருன வட இலங்கைக்கு அது தலைநகராக இருந்து வருகிறது. இந்நகரில் நான்கு லட்சம் மக்கள் உள்ளனர். அளவில், இது மதுரையை ஒத்தது. மதுரை, திட்ட மிட்டுக் கட்டப்பெற்ற நகரம்; யாழ்ப்பாணம் இதற்கு நேர் மாறுனது. யாழ்ப்பாணத்தில் - புது டில்லியில்போல - ஒரு சாலைமா திரியே மற்ற சாலைகளும் இருக்கின்றன. சாலையின் இரு மருங்கு

களிலும் மறைவு தட்டியாக - பனை ஓலையினுலோ, தென்னேலைக் கிடுகுகளினுலோ ஆன - வேலிகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. வீடு கட்டுவதற்கும் வீட்டுத் தோட்டத்தேவைகளுக்கும் கோடிக்கணக்கான பனைமரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்ருல் இதை மேலும் விவரிக்க வேண்டுவதில்லை. மரமும் செடியும் கொடியும் அங்கே மிகுதி. அவ்வாறிருந்தும் அங்கே மழை அரிதாகவே பெய்கிறது. அங்கு, கூடுதலான வெப்பம் 90 டிகிரி தானும்.

தரங்கம்பாடியை "டிராங்குபார்" என்று திரித்துக் கூறிய ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தை "ஜாப்ன" என்று அழைத்தனர். யாழ்ப்பாணம் என்பது தூய தமிழ்ச் சொல். பண்ணேடு இசைபாட வல்லவர் பாணர் என்று அழைக்கப் பெற்ருர்கள். இந்த வகுப்பார் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்திருக்கக்கூடும். சிலப்பதிகாரத்தில் பாணர் இருந்த ஒரு வீதி புகழப்படுகின்றது. வேதாரண்யத்தில் யாழ்ப்பாணர் பெயரால் ஒரு வீதி இன்னும் இருந்து வருகிறது. யாழ் என்னும் இசைக் கருவியைத் திறம்பட இசைத்து இலங்கையில் பாணர் குடியேறிய பகுதி யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். யாழ் என்னும் இசைக் கருவி அந்நகரில் இப்பொழுது இல்லாவிட்டாலும் யாழ் அடையாளமுள்ள புடவைகள் அங்கே விற்கப்படுகின்றன. அந்த மக்களுடைய கொடியிலும் இந்த இசைக்கருவி காட்சி தருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஓர் ஆகாய விமான நிலையமும் ஒரு துறைமுகமும் உள்ளன. தரங்கம்பாடி துறைமுகத்தைப்போலவே, யாழ்ப்பாணத்திலுள்ள காங்கேசன்துறைத் • துறைமுகமும் இப்

போது மூடப்பட்டிருக்கிறது. தரங்கம்பாடியில்போலவே யாழ்ப்பாணத்திலும் 250 ஆண்டுகளுக்குமுன் டச்சுக் காரர் ஆண்டனர். அதன் நினைவாக இரு நகரங்களிலும் கோட்டைகள் உள்ளன. இரண்டும் கடற்கரையி லேயே உள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டை சிறிது; அதன் அகழி, அமைப்பில், தஞ்சைச் சிறிய கோயிலின் அகழியைப் போன்றது. கிறித்தவ ஆலயம் ஒன்றும், அரசியல் அலுவலர்களின் இல்லங்களும், (கைதிகள் தப்பி ஓட முடியாதபடி அமைக்கப்பெற்ற) ஒரு சிறைச்சாலையும் கோட்டையில் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் பார்க்கத் தகுந்த ஒன்று கீரிமலை என்னுமிடம். இது ஒரு மலை அன்று. இது கடற்கரை அருகே உள்ள ஒரு நீர் ஊற்று. ஆடவரும் பெண்டிரும் தனித்தனியே நீராடுவதற்கான ஏற்பாடுகள் இங்கே உள்ளன. ஆடவர்க்கான பகுதி 30 அடி நீளமும், 18 அடி அகலமும் இருக்கலாம். தண்ணீரின் ஆழம் மூன்று அடி இருக்கலாம் இயற்கையான தூய தண்ணீர் ஊறிக்கொண்டே இருப்பதால் இதில் நீராடுவது உடலுக்கு நலம் தரும். வைகறையில் நீராடச் செல்வது நன்று; நேரம் ஆக ஆக, கடல் நீர் கலந்து, கீரிமலையி லுள்ள நீர் உப்பாகி விடுகிறது. இந்த ஊற்றின் ஒரு புறத்தில் சுவர் ஓரமாக மிகச் சிறிய பாதை ஒன்று இருக் கிறது. யாழ்ப்பாணத்துச் சிறுவர் பலர் இக்குறுகிய பாதையில் நடந்த வண்ணமாய் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயிற்சியால் அவதானிக்கும் ஆற்றலை (Powers of Concentration) வளர்ப்பதாக நண்பர் ஒருவர் தெரி வித்தார். யாழ்ப்பாணத்திற்குச் சென்று கீரிமலையில் நீராடாமல் இருப்பது காசிக்குப் போய்க் கங்கையில்

குளிக்காமல் இருப்பதைப் போன்றதாகும். "எச்சில் உமிழ்தல், தண்ணீர் எத்துதல், அழுக்குப் பொருள்கள் கழுவுதல் ஆகிய அடாத செயல்கள்" இக் கேணியில் செய்யக் கூடாது. அத்தகைய அடாத செயல்களைத் தூய்மை குறைவாயுள்ள வடநாட்டோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். கீரிமலையில் நீராடி முடிந்த பின்னர் அருகிலுள்ள சிவனை வழிபட்டு விட்டுச் சிற்றுண்டி உட்கொள்ளலாம். அங்குள்ள உணவு விடுதிகளில், "தோசை சூடாக வார்த்துத் தருவார்கள்; தேயிலையும் நல்ல மாதிரி போட்டு வாங்கலாம்." கீரிமலைக்கருகே உள்ள சிமெந்துத் தொழிற்சாலையும் பார்க்கத் தக்கது. இலங்கையில் இதைத் தவிர வேறு சிமெந்துத் தொழிற் சாலை கிடையாது. 200 ஏக்கர் பரப்பு முழுவதும் சுண்ணும்புக் கல் கிடைப்பதால் இங்கே இத் தொழிற் சாலை நிறுவப்பெற்றிருக்கிறது.

மாவிட்ட புரத்திலும், நல்லூரிலும் சிறந்த கோவில்கள் உள்ளன. இவை ஒருவகைக் கட்டிடக் கலையை எடுத்துக் காட்டுவன. ஆனல் இராமேசுவரம், திருவாரூர், மதுரை, காஞ்சிபுரம் போன்ற நகரங்களி லுள்ள கோவில்களைப் பார்த்தவர்களுக்கு யாழ்ப் பாணத்துக் கோவில்கள் ஒருவகை ஏமாற்றத்தைத் தரக்கூடும். தனிப்பட்டவர்கள் கோவில் கட்டிப் பொருளீட்டுவது யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிலாக இருந்து வருவதால் கோவில்களை அரசாங்க மேற் பார்வைக்கு உட்படுத்தும் சட்டம் உருவாகி வருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களுக்கு மிகுதியான சொத்துக்கள் உள்ளன. வண்ணையிலுள்ள சிவன் கோவிலுக்கு இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்

திலும் ஏராளமான சொத்துக்கள் இருப்பதாக அறிந்தேன். தில்லையிலுள்ள நடராசர் கோவிலுக்கும் யாழ்ப்பாணத்தில் பல சொத்துக்களை யாழ்ப்பாணத்தவர் அன்பளித்திருக்கின்றனர்.

அச்சுவேலி, நீர்வேலி, சாவகச்சேரி, திருநெல்வேலி, குறும்புசிட்டி, சுன்னுகம், நல்லூர், உரும்பிருய், மாவிட்டபுரம், கொக்குவில், பலாலி, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை போன்ற பல சிற்றூர்கள் யாழ்ப்பாண நகரை அடுத்துள்ளன. இவை யனைத்தையும் யாழ்ப்பாணம் என்றே எண்ணி, தமிழ்நாட்டவர் பலர் இவ்வூர்களுக்குக் கடிதம் எழுதும்போது முகவரியில் யாழ்ப்பாணம் என்பதையும் தவருக எழுதி வருகிருர்கள். இவை தவிர, யாழ்ப்பாணத்தை அடுத்து நெடுந்தீவு, புங்கிடுதீவு, நயினுதீவு போன்ற பல தீவுகளும் இருக்கின்றன. தீவுகளுக்குச் செல்ல மிகப் பல சாலைகள் உள்ளன. இடையிடையே உள்ள கடற்பகுதியைக் கடக்க இயந்திர மரக்கலங்கள் உள்ளன. கொச்சியில் நாள்தோறும் நிகழ்வதுபோல இங்கும் ஒரு தீவிலிருந்து மற்ருெரு தீவுக்கு மோட்டார்கார்களையும் ஏனைய வாகனங்களையும் படகுகளில் ஏற்றிச் செல்லுகின்றனர்.

சாதாரணமாக இலங்கைக்குச் செல்லுபவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்லுவதில்லை. யாழ்ப்பாணத்திற்குச் செல்லுபவர்கள்கூட, தீவுப் பகுதிகளுக்குப் போவதில்லை. யாழ்ப்பாணத்திலுள்ளவர்களிலும், தீவுப் பகுதிகளைப் பார்க்காதவர் பல்லாயிரவர் உள்ளனர். பிறர் செல்லாத இடங்களுக்குச் செல்லுவதில் எனக்கு எப்போதுமே ஒரு தனி ஆர்வம் உண்டு. ஆகையால், சில தீவுகளுக்கு நான் "சமூகம்" கொடுத்தேன். இவற்றுள்

முக்கியமானது மணிபல்லவம் என்று சொல்லப்படும் நயினை தீவு. காவிரிப் பூம் பட்டினத்திற்குத் தென் - கிழக்கே உள்ள தீவு என்றும், "மணிமேகலையை மணிபல்லவத்துய்த்து" என்றும் ஐம்பெருங் காப்பியங் களுள் ஒன்றான மணிமேகலையில் இத் தீவு குறிக்கப் பெற்றிருக்கிறது. இங்கே புத்தர் தரிசித்தார் என்று ஒரு வரலாறு வழங்கி வருவதால், பௌத்தர்களுக்கு இது ஒரு பெரிய ஸ்தலமாக இருந்து வருகிறது.

யாழ்ப்பாணத்துக் கோட்டையிலிருந்து யான் புங்கிடு தீவுக்குச் சென்றேன். இங்கிருந்து வள்ளம் (சிறு படகு) ஒன்றில் அரை மணித் தியால (நேர)த்தில் நயினை தீவை அடைந்தேன். இக் கடற்பாதை மேடு பள்ளம் நிறைந்தது. பல இடங்களில் வள்ளம் கற்களுடன் மோதிற்று. கீழே, ராமர் அணை இருப்ப தாகப் படகோட்டி தெரிவித்தான். இவ்விரு தீவுகட்கு மிடையே சாலை அமைக்க முயற்சி நடைபெறுவதாகவும் அறிந்தேன். கடலின் நடுவிடத்தில் கொக்குகள் தங்கும் மேடு ஒன்று இருக்கிறது. நரிகளும் இந்தக் கடலைத் தாவுகின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சப்த (ஏழு) தீவுகள் இருக்கின்றன. இவற்றுள் புகழ் பெற்றது நயினை தீவு; மிகப் பெரியது நெடுந்தீவு. யாழ்ப்பாணத்திலிருந்து இயந்திரப் படகு (மோட்டார் லாஞ்சு) வாயிலாகவும் நயினை தீவுக்கு வரலாம். இவை யாழ்ப்பாணத்திலிருந்து 15 கட்டை (மைல்) தொலைவி லுள்ள ஊர்காவல் துறையிலிருந்து புறப்படு கின்றன.

நயினை தீவின் நீளம் இரண்டரைக் கட்டை. அகலம் முக்கால் கட்டை. இங்கே நான்கு (சைவ,

இஸ்லாமிய, கிறித்தவ, புத்த) சமயத்தார் உள்ளனர். இந்தத் தீவில் மொத்தம் நாலாயிரம் பேர் வாழ்கின்றனர். நெல், தேங்காய், சிறு தானியம், வரகு, பயறு, புகையிலே, கத்திரிக்காய் ஆகியவை இங்கே ஏராளமாகக் கிடைக்கின்றன. பாய் முடைவது, கூடை பின்னுவது, மீன் பிடிப்பது போன்ற தொழில்களும் இங்கே மிகுதி. இங்கு மீன் பிடிக்கவோ, வள்ளம் ஓட்டவோ தத்துவம் (லைசன்சு) வேண்டுவதில்லை. ஆனி, ஆடி மாதங்களில் நடைபெறும் உற்சவங்களின்போது, "மெத்தத் திரளான சனங்கள்" இங்கே வந்து போகிறார்கள். இங்கேயுள்ள புத்தர் கோயில் அண்மையில் புதுப்பிக்கப் பெற்றிருக்கிறது. இந்தப் புத்தர் கோயிலில் பிள்ளையார் விக்கிரகம் ஒன்றும் இருக்கிறது. புத்தர் கோயிலுக்கு நாள்தோறும் ஏறத்தாழ நூறு யாத்ரீகர்கள் வருகிறார்கள். நயினா தீவில் இந்தக் கோயிலுக்கு மட்டுமே மின்சார விளக்கு வசதி உண்டு. ஏனைய புத்தர் கோயில்களில் இருப்பதைப் போன்று இங்கேயும் இரண்டு மூன்று பிக்குகள் (பிக்கு என்ற சொல்லுக்குப் புத்த சாமியார் என்பது பொருள்) இருக்கிறார்கள்.

நயினா தீவிலுள்ள அம்பாள் கோயில் துறைமுகத்திற்கு எதிரில் இருக்கிறது. இந்த அம்பாள் கோயிலுக்குள் ஆண்கள் "சட்டை போட்டுக் கொண்டும் மதுபானம் அருந்தியிருக்கும்போதும்" செல்லக் கூடாது. இக் கோயில் திருவிழாவின்போது ஆண்டு தோறும் 20,000 இந்துக்கள் இந்தத் தீவுக்கு வருகிறார்களாம். 64 சத்தி பீடங்களுள் ஒன்றான ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் இக் கோயிலே யென்று கருதப்படுகிறது. இக் கோயிலில் கல்வெட்டுக்கள் சில உள்ளன. பொதுவாக,

புதைபொருள் ஆராய்ச்சியாளர்க்கு நயினதீவில் மிகுதியான வேலை உண்டு.

நயின தீவின் நடுவில், இத் தீவில் பிறந்தவரும் சீவன் முக்தராய் விளங்கியவருமான ஸ்ரீ முத்துக் குமாரசாமி அவர்களின் சமாதி இருக்கிறது. இவரது சீடர்கள் ஈழ நாடெங்கும் உள்ளனர். மூன்று ஆண்டுகட்கு முன் இவர் சமாதி அடைந்தபோது, இத் திருப்பணி கட்டி முடிக்கப் பெற்றது. இப் பெரியாரால் தோற்றுவிக்கப்பெற்ற ஒரு சிறந்த திருக்குளம் சமாதிக்கு வடமேற்கே கூப்பிடு தொலைவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.

நயின தீவு சில துறைகளில் காலத்திற்கேற்ற முன்னேற்றம் அடைந்துள்ளது. இங்கே இலங்கை அரசாங்கத்தார், சன சமூக நிலையம் (கம்யூனிடி செண்டர்) ஒன்றை அமைத்துள்ளனர். ஏழைகளுக்குக் கடற்கரையோரத்தில் அரசியலார் செலவில் வீடுகள் கட்டப்பெற்றிருக்கின்றன. நயின தீவில் மலக்கூடுகளும் (கக்கூஸ்) உள்ளன; சுகாதார அலுவலர் (ஹெல்த் இன்ஸ்பக்டர்) ஒருவரும் இருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் வாயிலாகத்தான் நயின தீவுக்கு வெளியுலகத்தோடு தொடர்பு உண்டு. இவ்விரு இடங்களையும் கம்பியில்லாத் தந்தி (வயர்லஸ் டெலிகிராப்) இணைக்கிறது. இந்த நிலையம் ஒன்று நயின தீவில் இருக்கிறது.

நயின தீவுப் பயணத்தை யான் ஒருகாலும் மறக்க இயலாது. அங்குள்ள மக்களின் அன்பு அளவு கடந்தது. யான் அந்தத் தீவுக்கு வருவேனென்று

அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. அங்கே ஒரு பொதுக் கூட்டம் நடந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டதாம். ஆகையால் அங்குள்ள ஆசிரிய அன்பர்கள் என்னை அன்றிரவு அங்கே சுணக்கி ஒரு கூட்டத்திற்கு "ஆயத்தம்" செய்து விட்டார்கள். "பறை போட்டு" ஊர்முழுவதும் "அறிவித்தல்" செய்தார்கள். கூட்டத்திற்கு "நியாயமான சனங்கள்" வந்திருந்தார்கள். அங்கே பூ மாலை கிடைப்பது அருமையாக யிருந்தும் அன்பர்கள் "மெனக்கட்டு" அவற்றைக் கொண்டு வந்தனர். யான் பேசி முடிந்ததும், கூட்டத்தினர் சரமாரியாகக் கேள்வி கேட்டனர். அதிலிருந்து அவர்களுடைய தமிழ்ப் பற்றையும் அறிவுப் பசியையும் தெரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதன் பிறகு பேசிய அன்பர்கள் தமிழறிஞர் பலர் தங்கள் தீவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய (பெரிய உபாத்தியாயர் என்று அப்பகுதி எங்கும் புகழ்பெற்ற) ஆசிரியர் எஸ். என். கந்தையா அவர்கள் நயினு தீவிலுள்ள மாணவர்களின் நாணயத்தைப் பெரிதும் பாராட்டினர். யாத்ரீகர்கள் தொலைத்து விட்ட விலை உயர்ந்த பொருள்களை அந்த இளைஞர்கள் கண்டெடுத்து உரியவர்களிடம் ஒப்புவித்த நிகழ்ச்சிகள் சிலவற்றை அவர் எடுத்துக் கூறினர்.

**நயினு தீவில் இருப்பவை:-**

கடற் தாழை, கடற்பாசி, பாம்புகள், ஒரு "சப் போஸ்ட் ஆபீஸ்", பல இடங்களில் தபால் பெட்டிகள், நேரான சாலைகள், இரண்டு "வாசிகசாலைகள்", அரசாங்கத்தார் நடத்தும், பள்ளி உட்பட மூன்று பள்ளிகள்,

ஏராளமான சைகிள்கள், ஒரு மான், இரண்டு வானொலிக் கருவிகள், ஒரு மறுத்துவச்சாலை.

நயினை தீவில் இல்லாதவை :-

கலங்கரை விளக்கு (லைட் அவுஸ்,) மோட்டார்க் கார், போலீஸ் ஸ்டேஷன், அணில், கீரி.

யாழ்ப்பாணத்தில், கரையோரங்களில், மீன்பிடிக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது ; இதில் கிறித்தவர் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். பாம்பன் பகுதியிலிருந்து ஆமைகளைப் பிடித்து வந்து யாழ்ப்பாணத்தில் விற்பவரும் உள்ளனர். கடற்கரைச் சாலையில் மீன் பிடிப்பவர்களுக்கு நகராண்மைக் கழகத்தார் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் புகையிலை மிகுதியாகப் பயிரிடப் படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து பாடம் பண்ணிய புகையிலை ஆண்டுதோறும் 15 லட்சம் ரூபாய்க்கு மலையாளத்திற்கு ஏற்றுமதியாகிறது. ஆகையால் நீங்கள் சுருட்டுப் புகைப்பவர்களா யிருந்தால், யாழ்ப்பாணம் திறம் சுருட்டை "ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள் ; உண்மை விளங்கும்".

யாழ்ப்பாணம் இரண்டு பொருள்களுக்குப் பெயர் பெற்றது - ஒன்று எழுத்தாணி, மற்றொன்று பஞ்சாங்கம். கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை இப்போது அச்சிடும் இயந்திரம் பாதுகாத்து வருவதால் எழுத்தாணியின் சிறப்பை நம்மில் சிலர் மறந்திருக்கக் கூடும். பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்களுடைய அறிவுச் செல்வத்தை அழியாது தேக்கிப் பரம்பரையாக வழங்கப் பயன்பட்ட கருவி அது ஒன்றேயாம்.

யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேத வைத்தியர்கள் மிகுதியாக இருக்கின்றனர். அங்கே மிகுதியாயிருப்பவற்றுள் பூவரச மரம், பனை மரம், களவு, கொசு ஆகியவற்றையும் குறிப்பிடலாம். நெல் விவசாயமும் அங்கே மிகுதி. யாழ்ப்பாணத்தில் இருப்பவை :-விவேகானந்தர், இராமகிருஷ்ணர் இவர்கள் பெயரால் பல நிலையங்கள், மிகப் பல கல்லூரிகள், வீட்டிற்குள் தென்னை முருங்கை மரங்கள், முற்றங்களில் காய் கறித் தோட்டங்கள், செவ்விளநீர்.

யாழ்ப்பாண நகரில் இல்லாதவை :-நெருக்கமிக்க வீடுகள், தெருவில் அசுத்தம், நல்ல தண்ணீர், தானே நீரைக் கழுவிக் கொண்டு செல்லும் அமைப்பு (பிளஷ் அவுட்), குழாய் வசதி, மாடி வீடு, திருமண விருந்துகளில் முருங்கைக்காய் ஆகியவை. பிற்பகல் 6 மணிக்கு மேல் கடைகளைத் திறந்து வைப்பது, சட்டைபோட்டுக் கொண்டு கோயிலுக்குள் செல்லுவது, சைவ உணவு விடுதிகளில் தகரத் தட்டுகளைப் பயன்படுத்துவது போன்ற வழக்கங்களும் அங்கேயில்லை.

யாழ்ப்பாணத்தார் பழமையில் மிகுதியான ஈடுபாடுடையவர்கள். சமயப் பற்றில் மட்டுமல்ல, சடங்குப் பற்றிலும் அவர்கள் பெரு விருப்புடையவர்கள். அவர்களில் மிகப் பலர் இந்துக்கள். ஒரு சிலர் கிறித்தவராகவும் உளர். புத்த மதம், இஸ்லாமிய மதம் ஆகியவற்றில் சேர்ந்திருப்பவர்களும் சிலர் உண்டு. ஒரு குடும்பத்தில் மனைவி ஒரு சமயத்தவராயும், கணவன் மற்றொரு சமயத்தவராயும் இருப்பது யாழ்ப்பாணத்தில் சாதாரணமான ஒரு காட்சி. யாழ்ப்பாணத்தார் விருந்தோம்பலில் சிறந்து விளங்குகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் சிங்களவர் ஒரு சிலர் இருக்கின்றார்கள். ஏனையோர் அனைவரும் தமிழ் மொழியைப் பேசுபவர்களே யாவர். ஆகையால் உலக வழக்கில் யாழ்ப்பாணத்தார் என்ற சொல் யாழ்ப்பாணத் தமிழர் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே யாழ்ப்பாணத்தாரின் தாய்மொழி தமிழ்; தமிழைத் தம் உயிருக்கு ஒப்பாக மதிப்பது அவர்தம் இயல்பு. அவர்கள் தமிழ்நாட்டுக்கு வெளியே இருப்பதால் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலக"த்தில் வாழும் தமிழ் மக்களாகிய நமக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு ஆங்கிலேயருக்கும் ஆஸ்திரேலியருக்கும் இருந்துவரும் நட்பையும், தொடர்பையும் போன்றதாம். தமிழ்ப் பண்பாட்டினையும் தமிழ் மொழியிலுள்ள அரிய சொற்களையும் யாழ்ப்பாணத்தார் பாதுகாத்து வருவது பாராட்டுக்குரியது. தமிழ் நாட்டில் தமிழ் மொழியை இயன்ற வகையிலெல்லாம் சிலர் பாழாக்கி வருகின்ற இந்நாளில் யாழ்ப்பாணத்தார்களின் தமிழ்ப் பற்று, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத்தாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காதவர்களும், நீலக்கடல் (Blue Lagoon) என்னும் திரைப்படத்தைப் பார்த்திருந்தால் யாழ்ப்பாணத் தமிழைக் கேட்டு மகிழ்ந்திருக்கலாம். ஆனால் அவர்களிடமும் கொச்சைத் தமிழ் உண்டு. அவர்கள் நம்மிடம் கொச்சைத் தமிழ் இருப்பதாக நினைக்கிறார்கள். இரண்டும் உண்மைதான். ஆனால் இதை யொட்டி நாம் ஒருவரையொருவர் அலட்சியம் செய்வது சரியன்று. மாமல்லபுரத்திற்கு ஒரு முறை சென்றிருந்தபொழுது

ஒரு சிறுவன் நுங்கு (பனை) விற்றான். சென்னையிலிருந்து பலர் சென்றிருந்ததால் அவன் கூடுதலாக விலை சொன்னான். "ஏன் இப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டதற்கு "உள்ளே மூன்று கண்ணி" இருப்பதாக அவன் சொன்னான். நகரத்தில் வாழ்பவர்களுக்கு நுங்குக்குள் கண்ணி இருப்பதுகூடத் தெரியாது என்பது அந்த கிராமச் சிறுவனுடைய கருத்து. "அது எங்களுக்கும் தெரியும், அப்பா நாங்களும் கிராமத்திலிருந்துதான் நகரத்திற்குச் சென்றோம்" என்று நான் பதில் சொன்னபொழுது அவன் ஏதோ புதிய செய்தியைத் தெரிந்து கொண்டதுபோல் விழித்தான். தமிழ் நாட்டாரும் யாழ்ப்பாணத்தாரும் ஒருவரை யொருவர் பகிடி (கேலி) செய்து கொள்ளுவதும் இதைப்போலத் தான் இருக்கிறது. யாழ்ப்பாணத்தாரிடம் இருக்கக் கூடிய ஒரு சில கொச்சைச் சொற்களைத் தவிர்த்துவிட்டு அவர்களிடையே வழங்கும் இனிய சொற்களை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். விவசாயம் என்பதற்கு அவர்கள் கமத் தொழில் என்றே சொல்லியும் எழுதியும் வருகின்றனர். கமம் என்பது உழவு. தொழில் என்ற பொருளில் "கம்" என்ற சொல் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போலவே படகு என்பதற்கு வள்ளம் என்ற சொல்லையும், டோல்கேட் என்பதற்கு "ஆய வாயில்" என்ற சொல்லையும் இம் மக்கள் வழங்கி வருகின்றனர். "இலங்கைக்கோல்" "அணைக்கட்டு" போன்ற தமிழ்ச் சொற்கள் சிங்கள மொழியில் இருப்பதையும் இங்கே தெரிவிக்கலாம்.

யாழ்ப்பாணத்தாருடைய தமிழ்ப் பற்று எல்லையற்றது. தமிழன்னைக்குத் தொண்டாற்றி மறைந்த

அறிஞர்களுள் யாழ்ப்பாணத்தில் தோன்றியவர்கள் மிகப் பலர். ஆறுமுகநாவலர் பெருமானைப் பற்றி அறியாத தமிழரே இல்லையெனலாம். சுன்னாகம் குமாரசாமிப் புலவர், சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோருடைய தமிழ்ப் பணியும் தமிழ்நாட்டார் நன்கு அறிந்தவையே. இன்றுவரை அகராதி தொகுக்கும் துறையில் யாழ்ப்பாணமே தலைசிறந்து விளங்குகின்றது, கதிரைவேற் பிள்ளை, கரோல் விசுவநாதப் பிள்ளை. கிங்ஸ்பரி தேசிகர் ஆகியோர் இத் துறையில் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றனர். பேர்சிவல் வெளியிட்ட ஆங்கில-தமிழ் அகராதியும், டாக்டர் கிரின் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்த வைத்திய நூல்களும் வெளியானதற்கு யாழ்ப்பாணத்தாரே காரணமாவார்கள்.

யாழ்ப்பாணத்தார் நாள்தோறும் பயன்படுத்தும் சொற்கள் சிலவற்றையும், அவற்றின் பொருள்களையும் கீழே காண்க :—

| | | |
|---|---|---|
| பந்தம் பிடிப்பது | ... | காக்கை பிடிப்பது |
| மானம் | ... | கிராக்கி |
| இளம்புரி | ... | மணமாகாதவர் |
| விசர் | ... | பயித்தியம் |
| ஐமிச்சம் | ... | சந்தேகம் |
| பாவிப்பது | ... | பயன்படுத்துவது |
| கதியிலே | ... | விரைவில் |
| சீசீ | ... | இல்லை |
| வடிவாய் | ... | தெளிவாய் |
| இடைக்கிடை | ... | இடையிடையே |

| | | |
|---|---|---|
| காலம் கூடாதோ | ... | கெட்டகாலமா ? |
| மணிக்கூடு | ... | கடிகாரம் |
| மச்சம் | ... | இறைச்சி |
| மெத்திவிட்டது | ... | கூடுதலாகிவிட்டது |
| கரத்தை | ... | வண்டி |
| கமத்தொழில் | ... | விவசாயம் |
| ஒழுங்கை | ... | சந்து |
| மறியல் | ... | சிறைச்சாலை |
| மறியல்காரர் | ... | கைதி |
| தத்துவம் | ... | லைசென்ஸ் |
| இடாப்பு | ... | பட்டியல் |
| கந்தோர் | ... | அலுவலகம் |
| கச்சேரி | ... | அரசாங்க அலுவலகம் |
| அறிவித்தல் | ... | அறிவிப்பு |
| ஆயத்தம் | ... | ஏற்பாடு |

யாழ்ப்பாணத்தார் அரசாங்க உத்தியோகமே புருஷ லட்சணம் என்று எண்ணுகிறார்கள். பெருஞ் செல்வரும் வணிகத் துறையில் ஈடுபடாது, ஒரு பதவியில் அமரவே முயலுவது அவர்களுடைய வழக்கம். யாழ்ப்பாணத்தாரைச் சிக்கனத்தின் சின்னம் என்று சொல்லலாம். ஸ்காட்லண்டு மக்களிடம் உள்ளதைப் போன்ற குணப் பண்புகள் சிலவற்றை அவர்களிடம் காணலாம். ஸ்காட்லண்ட்காரர் இல்லாமல் பிரிட்டிஷ் ரயில்வேக்கள் ஓடா; யாழ்ப்பாணத்தார் இல்லாமல் இலங்கை ரயில்களும் ஓடா. ரயில்வே மட்டுமன்று; அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் பெரும்பான்மையான ஊழியர் யாழ்ப்பாணத்தாரே. யாழ்ப்பாணத்தின் பெரிய ஏற்று

மதி அரசாங்கத்திற்கு ஊழியர்களை அனுப்புவது என்று சொல்லலாம். இலங்கை அரசாங்கத்தாரும் யாழ்ப்பாணத்தார் ஒருவர்மீதுள்ள குற்றம் விசாரிப்பதென்றால் மற்றொரு யாழ்ப்பாணத்தாரைத்தான் நியமிப்பார்கள். முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்! பம்பாயில் வாழும் தமிழர் மாதுங்காவிலும், டில்லியில் வாழும் தமிழர் கரோல்பாக் பகுதியிலும் குடியிருப்பது போல - கொழும்பு நகரில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தார் பல்லாயிரவர்-பம்பலப்பட்டி என்னும் பகுதியில் இருந்து வருகின்றனர். பம்பலப்பட்டியைச் சின்ன யாழ்ப்பாணம் என்று சொல்லலாம்.

பெண் குழந்தையைப் பெற்றெடுப்பதையே யாழ்ப்பாணத்தார் பெரிதும் விரும்புவர். பெண் குழந்தை இல்லாவிட்டால் ஒரு குடும்பம் முற்றுப்பெறாது என்பது அவர்கள் கருத்து. "மகளுடைய பிள்ளையை எடுக்கிக் கொண்டு போ, மகனுடைய பிள்ளையை நடத்திக் கூட்டிபோ" என்று ஒரு பழமொழியும் அங்கே வழங்கி வருகின்றது. டச்சு ஆட்சியின்போது யாழ்ப்பாணத் தமிழரின் வழக்கங்கள் தேச வழமை என்ற பெயருடன் ஒரு சட்ட நூலாகத் தொகுக்கப் பெற்றன. அதன்படி ஆதன (சொத்து) உரிமை மகளிர்க்கே உரியது. மணப் பெண்ணுக்குச் சீர்தனமாகப் பெருந் தொகையைக் கொடுப்பது அங்குள்ள வழக்கம். இதனால் சமூக வாழ்வில் பெண்களுக்குச் செல்வாக்கு மிகுதியாக இருந்து வருகின்றது. திருமணம் முடித்ததும் மணமகன் மணமகளுடைய இல்லத்திற்கு வந்திருந்து அவளுடைய பெற்றோர்களுடன் வாழ்வதே அங்குள்ள வழக்கம். இந்த முறையினால் ஒரு

நன்மை ஏற்பட்டிருக்கிறது. அது என்ன எனின், மாமியார் — மருமகள் சண்டையென்பது யாழ்ப்பாணத்தில் கிடையாது. யாழ்ப்பாணத்துப் பெண்கள் தம் வாழ்நாளில் பல ஆண்டுகளைக் கல்வி கற்பதிலும், ஒவ்வொரு நாளிலும் சில நாழிகை நேரம் கிணற்றில் நீராடுவதிலும் செலவு செய்கிறார்கள். வெள்ளிக் கிழமைகள் தோறும் இப் பெண் மக்கள் ஆலயம் தொழுவர். யாழ்ப்பாணத்தில் பொதுவாக ஆடவர் 28 வயதிலும், பெண்டிர் 23 வயதிலும் சடங்கு (திருமணம்) செய்து கொள்ளுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர் பெண்டிரின் பெயர்களை நாம் அறிந்து இன்புறலாம். ஒரேவகையான இறுதிச் சொல் இவற்றில் இருப்பதைப் பாருங்கள். அம்மனுக்குப் பூசை ஆகித்தானே சுவாமிக்குப் பூசை ஆகவேண்டும்? ஆகையால் முதலில் பெண்களுடைய பெயர்களைச் சொல்வோம்:—ராஜேசுவரி, மகேசுவரி, அகிலாண்டேசுவரி, புவனேசுவரி, சத்தியானந்த ஈசுவரி, நித்யானந்த ஈசுவரி, சிவலோக ஈசுவரி, ஞான ஈசுவரி. இன்னும் தவமணி, நாகமணி, பொன்மணி போன்ற பெயர்களும் சாந்தநாயகி, வள்ளி நாயகி, போன்ற பெயர்களும் உண்டு. ஆடவருள் செல்வநாயகம், ராஜநாயகம், குணநாயகம், அரிய நாயகம், தனி நாயகம், பேரின்பநாயகம், சபாநாயகம், ஆகிய பெயர்களும், நாகலிங்கம், ராஜலிங்கம், பரம லிங்கம், நடேசலிங்கம், சுந்தரலிங்கம், கணேசலிங்கம், ஞானலிங்கம், பரதலிங்கம், சிவலிங்கம் ஆகிய பெயர்களும் உண்டு. இவைபோலவே அரியரத்னம், ராஜ ரத்னம், நவரத்னம், கனகரத்னம், விஜயரத்னம், ஞான

ரத்னம், தங்கரத்னம், செல்வரத்னம் என்ற பெயர்களும், சின்னத்தம்பி, பெரியதம்பி, நல்லதம்பி, சாமித்தம்பி, செல்லத் தம்பி, கதிர்காமத் தம்பி என்ற பெயர்களும் ராஜ சுந்தரம், கனக சுந்தரம், ஞான சுந்தரம், சிவபாத சுந்தரம் என்ற பெயர்களும் உள்ளன. பெண்களில் சிலர் சகலகலாவல்லி, லில்லிமலர், சொர்ணகாந்தி போன்ற பெயர்களையும் வைத்துக் கொள்ளுகின்றனர். ஆடவர் சிலருடைய பெயருக்கு முன்னால் முதலியார் என்று குறிப்பிடப்படுவதுண்டு. இது சாதிப் பெயர் அன்று. திவான் பகதூர் என்பதுபோல யாழ்ப்பாணத்தில் முதலியார் என்பது ஒரு பட்டப் பெயர். அரசாங்க அலுவலகங்களில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு இந்தச் சிறப்புப் பெயர் உண்டு. முகாந்திரம் என்பதும் ஒரு பட்டப் பெயரேயாகும். பெயர்களின் பட்டியலை இன்னும் விரிவாக எழுத எனக்குப் பஞ்சியாக (ஆர்வமில்லாமல்) இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எல்லோருமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். மிகுதியானவர்கள் உயர் கல்வி பயின்றவர்கள். கிறித்தவப் பாதிரிமார்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில்தான் தங்களுடைய கல்வித் தொண்டைத் தொடங்கினார்கள். இவ்வாறு ஏற்பட்ட கல்லூரிகளில் மிகச் சிறந்தது யாழ்ப்பாணக் கல்லூரி என்பது. இதை அமெரிக்க மிஷனரிமார் நடத்தி வருகின்றனர். மேற்கத்திய முறையில் ஆசியாவில் தோன்றிய முதற் கல்லூரி இதுவே என்பர். இங்குள்ள நூல் நிலையம் மிகப் பெரிது; அரிய நூல்கள் பலவற்றை இங்கே காணலாம். ஆனால் யாழ்ப்பாணக் கல்லூரி யாழ்ப்

பாணத்தில் இல்லை. அங்கிருந்து 10 கட்டை (மைல்) தொலைவிலுள்ள வட்டுக் கோட்டையில் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தார் விருந்தோம்பலில் சிறந்து விளங்குவதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். விருந்தினரைப் பூரண கும்பமும், குத்து விளக்கும் வைத்து வரவேற்று மகிழ்வது யாழ்ப்பாணத்தாரின் பண்பாடு. இத்தகைய காட்சிகளைக் கண்ட பின்னர்த்தான் காந்தியடிகள் "இந்தியாவில் காண முடியாத உண்மையான இந்தியப் பண்பாட்டை யாழ்ப்பாணத்தில் காணலாம்" என்று கூறினர்போலும். விருந்தினரை அழைத்துச் செல்லு முன்னரே சோறு உட்பட எல்லா உணவுப் பொருள்களையும் படைத்து விடுவது அவர்களுடைய வழக்கம்.

யாழ்ப்பாணத்தின் கற்பகத்தரு என்று பனையைச் சொல்லலாம். அங்கே பனை மரங்களுக்குக் கங்குகரையே இல்லை. எந்த இடத்திலும் பனை மரங்களைக் காணலாம். அங்கேயுள்ள பனைமரங்கள், பெண்ணை - பேந்து - பூமணத்தி - கருங்குத்தி எனப் பல வகைப்பட்டவை. யாழ்ப்பாணத்தார்கள் வீட்டைச் சுற்றிலும் வேலியடைப்பதால், அவர்களுக்குப் பனை மரம் இன்றியமையாதது. துடைப்பம் செய்யவும், தீயெரிக்கவும் பனைமட்டை பயன்படுகிறது. பனை நாரிலிருந்து எலிப்பொறி செய்வதும் உண்டு. பனம் பழத்தைப் பச்சையாகவும், வேகவைத்தும், பாணி (ஜெல்லி) யாகச் செய்தும் யாழ்ப்பாணத்தார் உண்பர். பனங்கிழங்கை எடுத்துக் காயவைத்துத் தேங்காயும் சர்க்கரையும் சேர்த்து உண்பர். பனங்கிழங்கைக் காயவைத்து ஒடியல் மாவால் பிட்டு, கூழ், உப்புமா,

ரொட்டி ஆகியவற்றைச் சரிக்கட்டுவார்கள். பனங் கிழங்கு யாழ்ப்பாணத்தில் ஜனவரி, பிப்ரவரி மாதங் களில் மிகுதியாய்க் கிடைக்கும். அந்த நாட்களில் அங்கே செல்வது சாலத் தகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இட்டிலியும், தோசையும், கீரையும், புளிக்குழம்பும் சிறப்பாக இருக்கும். மலையாள நாடு மோர்க்குழம்புக்கும், அவிய லுக்கும், மிளகு ரசத்துக்கும், சக்கைப் பிரதமன் என்னும் பலாச்சுளைப் பாயசத்திற்கும் புகழ்பெற்றது. சென்னை நகரம் சாம்பாருக்கும், பாஞ்சாபு லஸி என்னும் மோருக்கும் புகழ்பெற்றது. இவற்றைப் போலவே யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பான உணவு இடியாப்பம். இடியாப்பத்தைப் பற்றிச் சுவையான கதையொன்று உண்டு. புதிதாக யாழ்ப்பாணத்திற்கு வந்த ஒருவர் ஒரு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று ஏதாவது உணவு கொடுக்கச் சொன்னாராம். அங்குள்ள ஆள் இடியாப் பத்தைக் கொண்டு வந்து வைத்ததும், அவருக்குக் கோபம் வந்து விட்டதாம். "என்ன ஐயா, அவசர மாகக் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்லு கிறேன், இதைக் கொண்டு வந்து வைத்திருக்கிறீர்களே, முழுவதும் சிக்கலாக இருக்கிறது, இவ்வளவு சிக்கலையும் எப்பொழுது எடுப்பது?" என்று சொன்னாராம்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு விஞ்ஞானி சர் கே. எஸ். கிருஷ்ணன் வந்திருந்தார்; இடியாப்பம் செய்யும் முறையை அவர் அறிய முயன்றாராம். அதை, அறிந்த யாழ்ப்பாணத்தார், "விஞ்ஞானச், சிக்கலைத் தீர்த்து விடுகிறவர்களுக்கு

இடியாப்பச் சிக்கலை எடுக்க முடியாதா?" என்று சொல்லித் தம் வியப்பைத் தெரிவித்தார்கள்.

இடியாப்பத்துடன் "சம்பல்" என்னும் ஒரு வகைச் சட்டினியையும் யாழ்ப்பாணத்தார் தயாரிப்பார்கள். இது தேங்காய்ப்பூ, எலுமிச்சம் பழச்சாறு, பச்சை மிளகாய் ஆகியவை சேர்ந்தது. ஒரு சிலர் மாசி (மீன் மாமிசத் துண்டு)யையும் சேர்ப்பார்கள்.

சம்பலில் தேங்காய்ப் பூவைச் சேர்ப்பதைப் பற்றிச் சொன்னோம். பொதுவாக யாழ்ப்பாணத்தாருடைய உணவில் தேங்காய் கூடுதலாகப் பாவிக்கப்படுவதாகத் தமிழ் நாட்டார் கருதுகின்றனர். தமிழ் நாட்டு உணவில் பெருங்காயம் கூடுதலாக இருப்பதாக யாழ்ப்பாணத்தார் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாம்பழத்திற்குப் பெயர்பெற்றது. அங்கே சேலம் மாம்பழம், கருதரக் கொழும்பன், செம்பட்டான், மத்தளம் தூக்கி, மல்கோவா, அம்பழனி என்று பல சாதிகள் உள்ளன. கொழும்பு மாம்பழம் என்றும் ஒரு சாதி இருக்கிறது. இதன் விதை கொழும்பிலிருந்து (அரசாங்க அதிகாரி ஒருவரால்) கொண்டுவரப் பெற்றதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டதாம். கொழும்பு மாம்பழம் பச்சைத் தோல், முட்டை வடிவம், இனிய சுவை ஆகியவை கூடியது. யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் மாதத்தில் மாம்பழம் மிகுதியாகக் கிடைக்கும். நில நடுக் கடலில் (Mediterranean Sea) இருப்பதைப் போன்ற தட்ப வெப்ப நிலை யாழ்ப்பாணத்தில் இருப்பதால், எல்லா வகைப் பழங்களுமே மிகுதியாகக் கிடைக்கின்றன. கீரிமலையிலிருந்து சுளிவரம் வரையுள்ள

பகுதியில் ஆண்டு முழுவதும் அருமையான திராட்சைப் பழங்கள் கிடைக்கின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்னர், கவி இரவீந்திரநாத தாகூர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபொழுது, யாழ்ப் பாணக் கல்லூரி ஆசிரியர் சிலர் அவருக்கு ஒரு கூடை மாம்பழம் கொடுத்தார்களாம். "இது என்ன மாம் பழம்" என்று கவிஞர் கேட்டதற்கு, "கொழும்பு மாம்பழம்" என்று ஆசிரியர்கள் சொன்னார்களாம். அதற்குக் கவிஞர் "கொழும்பிலும் இதே மாம்பழத் தைத்தான் எனக்குத் தந்தார்கள். யாழ்ப்பாணம் மாம்பழம் என்று அங்கே பெயர் சொன்னார்கள். பாவம், இந்த மாம்பழத்தைத் தமது என்று சொல்லுவார் ஒருவரும் இல்லை போலும்" என்று பரிதாபப்பட்டாராம். மறுநாளும் ஆசிரியர்கள் கவிஞருக்கு ஒரு கூடை நிறைய மாம்பழம் அனுப்பினார்களாம். அப்போது கவிஞர் "நீங்கள் நிறையப் பழமாகத் தருகிறீர்களே" என்றும், "நான் இங்கே தங்கியிருப்பதால் நல்ல பலன் கிடைத்துவிட்டது" என்றும் இரு பொருள் நயம்பட "You are making my stay fruitful" என்று நகைச்சுவையுடன் கூறினாராம்.

**யாழ்ப்பாணத்தாரிடம் இருப்பவை :-**

தீண்டாமை, போட்டாபோட்டிக் கட்சிகள், சுவை குறைந்த சொற்பொழிவையும் பொறுமையாய்க் கேட்கும் இயல்பு, பள்ளி ஆசிரியர்களுக்குப் பெரு மதிப்பு, மேற்கொண்ட கொள்கைக்காகக் கிளர்ச்சி செய்யும் பண்பாடு, இரு தலைமுறைகளாகச் செல்வர்க ளாக யிருப்பவர்களுக்குப் பெருமதிப்பு, தங்களை

விலைக்கு விற்கும் அரசியல் தலைவர்களுக்குச் செல்வாக்கு, கம்யூனிஸ்டாகவுள்ள கோடீசுவரர்கள்.

**யாழ்ப்பாணத்தார் விரும்புவது:-**

"ஓரஞ்சு பார்லி" என்னும் கொழும்புச் சோடா, தவிடு கூடுதலாகவுள்ள சிவப்பு நிற அரிசி, காரமான உணவு, மாம்பழம், பலாப்பழம், இஞ்சி, சுக்குக்கோப்பி, வெள்ளைநிற உடை, சால்வை (துப்பட்டா), சோமன் ஜோடி (அகலமான கெண்டைக் கரையுள்ள பட்டு வேஷ்டியும், மேல்துண்டும்), வயலின், இந்தியப் பல்கலைக் கழகங்கள், முழங்கால் தெரியாமல் வேஷ்டி கட்டுவது, சொட்டை சொல்வது, "கல்கி" பத்திரிகை.

**யாழ்ப்பாணத்தார் விரும்பாதவை :-**

இந்தி மொழி, கால் சட்டை அணிவது.

**யாழ்ப்பாணத்தாரின் குலக் கடவுள் :-**

தில்லை நடராசர்.

**யாழ்ப்பாணத்தாரின் பேரவா :-**

வாழ்நாளில் ஒருமுறையாவது இந்தியாவுக்கு வரவேண்டும் என்பது.

ஒன்றரை அடி நீளமுள்ள கொழுமையான பாகற்காய்க்கு யாழ்ப்பாணம் புகழ்பெற்றிருக்கிறது. முருங்கையைப் பற்றிக் குறிப்பிடாமலும் யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கட்டுரை எழுத இயலாது. அங்கே மூன்று அடி நீளமுள்ள முருங்கைக்காய் கிடைக்கிறது. முருங்கைக்காயை யாழ்ப்பாணத்தார் மிகவும்

விரும்பி உண்பார்கள். முருங்கை மர வேரிலிருந்து, பெனிசிலின் ஸ்ட்ரப்டோமைசின் போன்ற அரிய மருந்துச் சரக்குகளை உற்பத்தி செய்யலாமென்று பங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்திருக்கின்றனர். ஆகையால் இனி எல்லா நாடுகளிலும் மக்கள் முருங்கையை மிகுதியாக உண்ணக் கூடும். நாள் தவருமல் சீமை இலந்தையை உட்கொண்டால் மருத்துவரைத் தேட வேண்டுவதில்லை என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. முருங்கைக் காய்க்கும் வருங்காலத்தில் இத்தகைய பழமொழி ஒன்று ஏற்படக்கூடும்.

மொகலாயப் பேரரசரான அக்பருக்கு முருங்கைக் காய்மீது மிகுதியான விருப்பமிருந்ததாம். அவர் ஒருநாள் முருங்கைக்காயின் சுவை, சத்து, மணம், குணம் ஆகியவற்றைப் புகழ்ந்தாராம். அதைக்கேட்ட அவருடைய மந்திரி ஒருவர், “ஆம் அரசரே, முருங்கைக்கு இணையான காய்கறி உலகில் எங்கே இருக்கிறது?” என்று கூறினாராம். சில மாதங்களுக்குப் பின்னர் அக்பர் முருங்கைக்காயைப் பற்றிக் குறைவாகச் சொன்னாராம். அப்போது அந்த மந்திரி, “ஆம் அரசே, இந்தக் காய் உடலுக்குத் தீமை விளைவிக்கக் கூடியது” என்றாராம். “முன்னொருமுறை இதற்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தீர்களே” என்று அக்பர் கேட்டபொழுது, “நான் முரணான கருத்துக்களைச் சொன்னது உண்மைதான். நான் அக்பருக்குத்தான் வேலைக்காரன், முருங்கைக்காய்க்கு வேலைக்காரன் அல்லவே” என்று கூறினாராம். அக்பரும் அவருடைய மந்திரியும் என்ன நினைத்தாலும் சரி, யாழ்ப்பாணத்தாருக்கு முருங்கைக்காயைப்

பற்றி ஓரேவிதமான உயர்ந்த கருத்துத்தான் எப்போதும் உண்டு.

முருங்கைக்காயைப் பற்றி மேலும் பல செய்திகளை நாம் இங்கே தெரிந்து கொள்வோம். அதில் "ஏ" என்னும் உணவுச் சத்து (வைடமின் ஏ) கூடுதலாக இருக்கிறது. தாதுபுஷ்டி லேகியங்களிலும் மருத்துவர்கள் முருங்கை விதையைத் துணைச் சரக்காகச் சேர்க்கிறார்கள். ஆகையால் நாம் எல்லோரும் நம் வீட்டுத் தோட்டத்தில் முருங்கை பயிரிடுவது சாலச் சிறந்தது. கம்பளிப் பூச்சி வருமென்று பயப்பட வேண்டுவதில்லை. பிணையல் (Phenyle) கலந்த நீரைத் தெளிக்கலாம் – உடம்பில் அல்ல, மரத்திலே!

108121

X 44231

# இன்ப நிலையத்தின் : : : : இணையற்ற நூல்..

## ம. பொ. சிவஞான கிராமணியார் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | ... | 1 | 12 | 0 |
| கப்பலோட்டிய தமிழன் | ... | 1 | 12 | 0 |
| வானொலியில் ம. பொ. சி. | ... | 1 | 8 | 0 |
| தமிழன் குரல் | ... | 1 | 4 | 0 |
| சுதந்தரப் போரில் தமிழகம் | ... | 0 | 10 | 0 |
| தமிழர் கண்ட காந்தி | ... | 0 | 8 | 0 |
| சிலப்பதிகாரமும் தமிழரும் | ... | 0 | 8 | 0 |
| தலைவர் ம. பொ. சி. (தொகுப்பு நூல்) | ... | 1 | 12 | 0 |

## சோம. லெ. இலக்குமணச் செட்டிய.. எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்காவைப் பார்! | ... | 2 | 12 | 0 |
| நமது தலைநகரம் | ... | 1 | 8 | 0 |

## "லக்ஷ்மி" டாக்டர் திரிபுரசுந்தரி எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| லட்சிய வாதி | ... | 5 | 8 | 0 |
| காஞ்சனையின் கனவு | ... | 4 | 0 | 0 |
| டாக்டரின் டைரி | ... | (அச்சில்) | | |

## நா. சோமசுந்தரன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| மனிதன் (நாடகம்) | ... | 2 | 0 | 0 |
| இன்ஸ்பெக்டர் ,, | ... | 2 | 0 | 0 |

## டாக்டர் மு. வரதராசன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| அந்த நாள் | ... | 3 | 0 | 0 |
| செந்தாமரை | ... | 1 | 8 | 0 |
| விடுதலையா? | ... | 1 | 4 | 0 |
| அரசியல் அலைகள் | ... | 1 | 4 | 0 |